www.kdu.lk

# குடியியற் கல்வி

## சுயகற்றல் கையேடு

## தரம் - 08



தயாரிப்பு – M.H.M முஸ்தன்ஸிர்
ஸாஹிரா கல்லூரி கல்முனை
(தேசிய பாடசாலை)

வலயக் கல்வி அலுவலகம் - கல்முனை







மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

**Medium**

**தமிழ்/ English**

**தரம்**
**01-A/L**

**76667-4945**

**தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்**
**தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன**

**www.learneasy.lk || www.lkedu.lk**

www.lkdu.lk

# 01 பொதுச் சேவைகள்

1. **பொதுச்சேவை வழங்கப்படுவதன் நோக்கம் யாது?**
   - ✓ மக்களின் வாழ்க்கைத் தரத்தை பண்பு ரீதியாக அபிவிருத்தி செய்வதற்கேயாகும்.

2. **பொதுச் சேவை என்றால் என்ன?**
   - ✓ மக்களின் வாழ்க்கை நிலையில் பண்பு ரீதியான அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கில், அரசு மற்றும் தனியார் துறை ஆகியவற்றால் அனைத்து மக்களுக்கும் வழங்கப்படும் சேவைகள் பொதுச் சேவைகள் எனப்படும்.

3. **நாம் பயன்படுத்தும் பொதுச்சேவைகள் 05 தருக.**
   - ✓ நீர் வழங்கல்
   - ✓ சுகாதாரம்
   - ✓ கல்வி
   - ✓ போக்குவரத்து
   - ✓ மின்சாரம



4. **மக்களுகக் பொதுச்சேவை வழங்கப்படும் தன்மையினை அடிப்படையாக கொண்டு அவற்றை 3 வகைப்படுத்தலாம் அவை எவை?**
   - ✓ **இலவசமாக வழங்கப்படும் பொதுச் சேவைகள்** - சுகாதாரம், கல்வி
   - ✓ **சலுகைக் கட்டண அடிப்படையில் வழங்கப்படும் பொதுச் சேவைகள்** - பருவச்சீட்டு
   - ✓ **கட்டணம் அறவிடப்பட்டு வழங்கப்படும் பொதுச் சேவைகள்** - மின்சாரம் , நீர் வழங்கல்

5. **பொதுச்சேவைகளை வழங்க அரசு பணத்தை பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் 2 தருக.**
   - ✓ வரி வருமானம்
   - ✓ வேறு வருமானங்கள்




6. **பொதுச்சேவைகளின் முக்கியத்துவம் 4 தருக.**
   - ✓ மக்களின் நாளாந்த வாழ்க்கை நடவடிக்கைகளை இலகுபடுத்துதல்
   - ✓ மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுதல்
   - ✓ சமூக நீதியை நிலைநாட்டுதல்
   - ✓ குறைந்த வருமானம் பெறுவோருக்கு உதவுதல்

7. **அநுராதபுர யுகத்தில் 10 கிராமங்களுக்கு ஒரு வைத்தியரை நியமித்த மன்னன் யார்?**
   - ✓ புத்ததாச மன்னன்

8. **பிரித்தானிய ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்ட சேவைகள் எவை?**
   - ✓ போக்குவரத்து
   - ✓ அஞ்சல் மற்றும் தந்திச் சேவை
   - ✓ வங்கிச் சேவை

9. **இலங்கையில் இலவச கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது? அறிமுகப்படுத்தியவர் யார்?**
   - ✓ கி.பி 1945
   - ✓ கலாநிதி C.w.w கன்னங்கரா



M.H.M Musthanzir

www.lkdu.lk



10. **இலங்கை சுதந்திமடைந்த ஆண்டு எது?**
    - ✓ 1948
11. **பொதுச்சேவைகளின் பண்புகள் 4 தருக.**
    - ✓ இலாப நோக்கத்திற்கு அப்பால் மக்களின் நலனை நோக்காகக் கொண்டு நடை முறைப்படுத்தப்படல்
    - ✓ குறைந்த வருமானம் பெறுவோராலும் இலகுவாகப் பெற்றுகொள்ளக் கூடியதாக விளங்குதல்
    - ✓ தனியாள் விருத்தியின் மூலம் சமூக அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்
    - ✓ அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்ய உதவுதல்

## எமது பிரதேசத்திலுள்ள பொதுச்சேவைகள்



1. **புவி மேற்பரப்பில் நீரினால் சூழப்பட்ட அளவு யாது?**
    - ✓ 70%
2. **குடிநீர் என்ற வகையில் பயன்படுத்தப்படும் அளவு யாது?**
    - ✓ 1%
3. **பொதுச்சேவை என்ற வகையில் குடிநீர் வழங்கல் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் 4 தருக.**
    - ✓ நாட்டின் சகல பிரதேசங்களிலும் தேவைகளை நிறைவு செய்வதற்குப் போதுமான அளவு நீர் காணப்படாமை
    - ✓ நிலக்கீழ் நீர் மற்றும் ஆற்று நீர் என்பன பல்வேறு காரணிகளால் மாசடைதல்
    - ✓ நகர்ப்புறப் பிரதேசங்களில் மக்கள் தொகைப் பெருக்கம்
    - ✓ வரட்சிக் காலங்களில் பல்வேறு பிரதேசங்கள் நீர்ப் பற்றாக்குறையை எதிர்நோக்குதல்
4. **எமக்கு நீரை வழங்கும் நிறுவனம் எது?**
    - ✓ தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை
5. **தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் சேவைகள் 3 தருக.**
    - ✓ நீர்வழங்கல், பராமரித்தல், புனரமைப்பு
6. **தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் கட்டமைப்பை தருக.**
    - ✓ பிரதேச பொறியியலாளர், பணிப் பொறுப்பதிகாரி, மானி வாசிப்பாளர்கள் நீர்த்தொகுதி இணைப்பாளர்கள்
7. **சுகாதார சேவையின் அடிப்படை செயற்பாடுகளை தருக?**
    - ✓ நோய் நிவாரணம் மற்றும் நோய்களைக் குணப்படுத்துதல்
8. **உலக சுகாதார தாபனம் (WHO) எந்த நோயை இலங்கை முழுமையாக ஒழித்த நாடாக பிரகடனப்படுத்தியது?**
    - ✓ மலேரியா நோயை



9. **இத்தகைய முன்னேற்றத்திற்கான காரணிகள் 04 எவை?**
    - ✓ சுகாதார சேவை அரசினால் இலவசமாக வழங்கப்படல்
    - ✓ இலங்கையின் சுகாதார சேவையில் ஏற்பட்ட முன்னேற்றம்
    - ✓ சுகாதார சேவை நாடு முழுவதும் வழங்கப்படல்
    - ✓ பொது மக்களின் ஒத்துழைப்பு

M.H.M Musthanzir

www.lkdu.lk



10. **சுகாதார சேவையின் செயற்பாடுகள் 4 தருக?**
    - ✓ நோயாளர்களுக்குச் சிகிச்சையளித்தல்
    - ✓ நோய்த் தடுப்பு வேலைத்திட்டங்களை செயற்படுத்தல்
    - ✓ வைத்திய சிகிச்சைகளை நடத்துதல்
    - ✓ கர்ப்பிணித் தாய்மாருக்குச் சிகிச்சையளித்தல்

11. **இலங்கையில் நடைமுறையிலுள்ள வைத்திய முறைகள் எவை?**
    - ✓ மேற்கத்தைய வைத்திய முறை, தேசிய ஆயுர்வேத வைத்திய முறை, சித்த, யூனானி மற்றும் ஹோமியோபதி போன்ற வைத்திய முறைகள்

12. **மேலைத்தேய வைத்திய முறையின் கீழ் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகள் 04 தருக.**
    - ✓ தேசிய வைத்தியசாலைகள்
    - ✓ போதனா வைத்தியசாலைகள்
    - ✓ மாகாண வைத்தியசாலைகள்
    - ✓ மாவட்ட வைத்தியசாலைகள்



13. **மேலைத்தேய வைத்தியமுறையின் கீழ் சுகாதார சேவை மூலம் நடைமுறைப்படுத்தப்படும் சேவைகள் 04 தருக.**
    - ✓ யானைக்கால் நோய் ஒழிப்பு வேலைத் திட்டம்
    - ✓ மலேரியா ஒழிப்பு வேலைத்திட்டம்
    - ✓ எயிட்ஸ் (AIDS) நோய் ஒழிப்பு வேலைத் திட்டம்
    - ✓ தொற்று நோய்கள் ஒழிப்புப் பிரிவு

14. **தொற்றாத நோய்களை தடுக்க இலங்கையில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட சேவை எது? எத்தனை உருவாக்கப்பட்டன?**
    - ✓ சுகவாழ்வு மத்திய நிலையங்கள் (2015 ஆம் ஆண்டில் 814 அளவில்)

15. **சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் மூலம் பிரதேசத்தில் வழங்கப்பட்ட சேவைகள் 04 தருக.**
    - ✓ தொற்று நோய்கள் ஒழிப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
    - ✓ தொற்றா நோய்களை ஒழிப்பதற்ககான வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தல்
    - ✓ சுகாதாரக் கல்வி வேலைத்திட்டத்தை செயற்படுத்துதல்
    - ✓ தாய், சேய் நலச் சிகிச்சைகளை நடத்துதல்

16. **ஆயுள்வேத வைத்திய முறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிறுவனங்கள் எவை?**
    - ✓ ஆயுர்வேத போதனா வைத்தியசாலை
    - ✓ ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம்
    - ✓ மாகாண சபைகள் மூலம் நிருவகிக்கப்படும் ஆயுர்வேத வைத்தியசாலை
    - ✓ மாகாண சபைகள் மூலம் நிருவகிக்கப்படும் ஆயுர்வேத மருந்தகங்கள்

17. **தொற்றா நோய்கள் 04 தருக.**
    - ✓ இருதய நோய், நீரிழிவு நோய், சிறுநீரக நோய், புற்றுநோய்

M.H.M Musthanzir

www.lkdu.lk

18. **தொற்றா நோய் நிலமைகளை தடுப்பதற்காக மக்களால் பின்பற்றபடவேண்டிய வழிமுறைகள் 04 தருக.**
    - ✓ வைத்திய ஆலோசனைகளைப் பின்பற்றுதல்
    - ✓ சுகாதாரமான உணவு மற்றும் பானங்களை உட்கொள்ளல்
    - ✓ போதுமான அளவு உடற்பயிற்சி செய்தல்
    - ✓ புகைபிடித்தல் மற்றும் மதுப்பழக்கத்தைக் கைவிடல்

19. **ஒரு நாட்டின் வளங்களில் மிகவும் பெருமதி வாய்ந்த வளம் எது?**
    - ✓ மனித வளமாகும்

20. **கல்வி உரிமையை பாதுகாக்க அரசு மேற்கொண்ட முயற்சிகள் 04 தருக.**
    - ✓ அரசினால் ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை கல்வி இலவசமாக வழங்கப்படுதல்
    - ✓ 05-16 வயது வரை பிள்ளைகளுக்கு கல்வி பெறுவது கட்டாயமாக்கப்பட்டிருத்தல்
    - ✓ வருடாந்த அரசாங்க வரவு - செலவுத் திட்டத்தில் பெருமளவு நிதி கல்விக்காக ஒதுக்கப்படல்
    - ✓ பாட நூல்கள், பாடசாலைச் சீருடை என்பன இலவசமாக வழங்கப்படல்
    - ✓ "அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை" என்ற கருப்பொருளுக்கமைய ஏறாத்தாழ 7000 பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல்

21. **முன்பள்ளி வயதை அடைந்த பிள்ளைகளுக்காக நடாத்தி செல்லப்படும் நிறுவனங்கள் எவை?**
    - ✓ உள்ளூராட்சி மன்றங்கள்
    - ✓ தொண்டர் அமைப்புகள்
    - ✓ சமய நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை ஆகியன மூலம் முன்பள்ளிப் பருவ விருத்தி நிலையங்கள் நடத்தப்படுகின்றன



22. **கல்வி மூலம் ஆற்றப்படும் பணிகள் எவை?**
    - ✓ அறிவை அளித்தல்
    - ✓ சமூகமயமாக்கத்தை ஏற்படுத்தல்
    - ✓ நற்பிரசைகளை உருவாக்கல்
    - ✓ தேசிய ஐக்கியத்தை விருத்தி செய்தல்

23. **உமது பிரதேசத்தில் பாடசாலை நடவடிக்கைகளுக்காக உதவும் நிறுவனங்கள் எவை?**
    - ✓ கோட்டக் கல்வி அலுவலகமும் வலயக் கல்வி அலுவலகமும்

24. **போக்குவரத்து சேவை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களை தருக?**
    - ✓ பாடசாலைக்குச் செல்லல்
    - ✓ தனிப்பட்ட பிரயாணங்கள்
    - ✓ வேலைக்குச் செல்லல்
    - ✓ சுற்றுலா நடவடிக்கைகள்



25. **போக்குவரத்து சேவைகளை வழங்கும் நிறுவனங்களை தருக.**
    - ✓ இலங்கைப் புகையிரதத் திணைக்களம்
    - ✓ இலங்கைப் போக்குவரத்துச் சபை
    - ✓ தனியார் பஸ் கம்பனிகள்
    - ✓ விமானச் சேவை




M.H.M Musthanzir

www.lkdu.lk

26. **இலங்கை போக்குவரத்து சபை மூலம் நடைமுறைப்படுத்தப்படும் விசேட சேவைகள் எவை?**
    - ✓ சிசுசரிய (மாணவர் பேருந்துச் சேவை)
    - ✓ கெமிசெரிய (கிராமியப் பிரதேசப் போக்குவரத்துச் சேவை)



27. **போக்குவரத்து சபையில் பணிபுரியும் பணிக்குழுவினர் யாவர்?**
    - ✓ சாலை முகாமையாளர்
    - ✓ உதவிச் சாலை முகாமையாளர்கள்
    - ✓ சாலைப் பரிசோதகர்கள்
    - ✓ வேலையாட்கள்
    - ✓ சாரதிகள்

28. **போக்குவரத்து சேவை முன்னேற்றத்திற்கு அரசின் பங்களிப்புக்கள் எவை?**
    - ✓ வீதிகளைப் பராமரித்தலும் திருத்தம் செய்தலும்
    - ✓ அதிவேக நெடுஞ்சாலைகளை நிறுவுதல்
    - ✓ புதிய பேருந்துகளை சேவையில் சேர்த்துக்கொள்ளல்
    - ✓ பிரயாணிகளின் பாதுகாப்புக்காக சட்ட நடவடிக்கை எடுத்தல்

29. **மின்சாரத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அத்தியாவசிய பணிகள் எவை?**
    - ✓ வீட்டிற்கு ஒளியூட்டுதல் மற்றும் சமையல் நடவடிக்கைகள்
    - ✓ சுகாதார சேவைகள்
    - ✓ வீடுகளுக்கான மின்சார வினியோகம்
    - ✓ கைத்தொழில் நடவடிக்கைகள்



30. **இலங்கை மின்சார சபையில் பணிபுரியும் பணியாளர்கள் யாவர்?**
    - ✓ பிரதேச மின் பொறியியலாளர்
    - ✓ உதவி மின் பொறியியலாளர்
    - ✓ மின்சார உத்தியோகத்தர்
    - ✓ எழுது வினைஞர்களும் பணியாளர்களும்
    - ✓ மின் இணைப்பாளர்கள்

31. **தகவல் பரிமாற்ற சேவை அத்தியாவசிய சேவையாக மாற்றம் பெற்றமைக்கான காரணிகள் எவை?**
    - ✓ சமூகத் தொடர்புகள் விருத்தியடைந்துள்ளமை
    - ✓ சர்வதேச தொடர்புகள் விருத்தியடைந்துள்ளமை
    - ✓ மனித தேவைகள் சிக்கலானதாக மாறியுள்ளமை
    - ✓ அதிக வேலைப்பளு



32. **தகவல் பரிமாற்ற சேவைகள் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் எவை?**
    - ✓ அத்தியாவசிய தகவல்களை மிகவும் விரைவாகப் பரிமாறுதல்
    - ✓ நாட்டின் நிருவாக நடவடிக்கைகளை இலகுபடுத்துதல்
    - ✓ வர்த்தக நடவடிக்கைகளை இலகுபடுத்துதல்
    - ✓ சுற்றுலா நடவடிக்கைகளுக்கு உதவுதல்

33. **அஞ்சல் அலுவலகங்கள் மூலம் ஆற்றப்படும் பணிகள் எவை?**
    - ✓ முத்திரை விற்பனை
    - ✓ கடிதங்கள் மற்றும் பொதிகளை அனுப்புதல்
    - ✓ தொலைபேசிச் சேவை வசதிகள்
    - ✓ ஓய்வூதியம் மற்றும் அரசினால் வழங்கப்படும் மக்கள் உதவிப் பணங்களை வழங்குதல்

M.H.M Musthanzir

www.lkdu.lk

34. **ஊடகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் எவை?**
- ✓ நாளாந்தம் நடைபெறுகின்ற முக்கிய நிகழ்வுகள் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டுதல்
- ✓ கேளிக்கை மற்றும் களிப்பூட்டும் நிகழ்ச்சிகளை முன்வைத்தல்
- ✓ பல்வேறு துறைகள் தொடர்பான அறிவினை விருத்தி செய்தல்
- ✓ மக்களின் கருத்துகள், முறைப்பாடுகள் போன்றவற்றை பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தல்

35. **பொலிஸ் துறையின் பிரதான சேவைகள் எவை?**
- ✓ சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுதல்
- ✓ மக்களுக்குப் பாதுகாப்பினை வழங்குதல்
- ✓ போதைப் பொருள் மற்றும் வேறு சட்ட விரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல்
- ✓ திடீர் அனர்த்தங்கள், விபத்துக்கள் மற்றும் பாதிப்புக்களின்போது சேவைகளை வழங்குதல்

36. **பொலிஸ் நிலையத்தில் காணப்படும் அதிகாரிகள் யாவர்?**
- ✓ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி
- ✓ பொலிஸ் பரிசோதகர்கள்
- ✓ உப பொலிஸ் பரிசோதகர்கள்
- ✓ பொலிஸ் சார்ஜன்கள்
- ✓ பொலிஸ் உத்தியோகத்தர்கள்

37. **பாதுகாப்பு படையினரால் மேற்கொள்ளப்படும் சேவைகள் எவை?**
- ✓ நாடு எதிர்நோக்கக்கூடிய யுத்த நிலைமைகளிலிருந்து நாட்டைப் பாதுகாத்தல்
- ✓ உள்நாட்டுக் கிளர்ச்சி, கலகம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல்
- ✓ அரசுகளின் பிரதிநிதிகளை வரவேற்க மரியாதை அணிவகுப்பை மேற்கொள்ளல்
- ✓ தேசிய பாதுகாப்பினைத் திட்டமிடுதல்

38. **"ஒருவர் எல்லோருக்கும் - எல்லோரும் ஒருவருக்கு" என்ற மகுட வாசகம் பயன்படும் சேவை எது?**
- ✓ கூட்டுறவு சேவை

39. **கூட்டுறவு சேவையின் பணிகள் எவை?**
- ✓ கடன் வசதிகளை வழங்குதல்
- ✓ போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல்
- ✓ வங்கிச் சேவைகளை வழங்குதல்
- ✓ காப்புறுதிச் சேவைகளை வழங்குதல்

40. **இலங்கையில் செயற்பட்டுவரும் கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள் எவை?**
- ✓ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
- ✓ கூட்டுறவுக் கடன் சங்கம்
- ✓ பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம்
- ✓ வீட்டுக் கூட்டுறவுச் சங்கம்

41. **சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக அரசினால் ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்கள் எவை?**
- ✓ சுற்றாடல் அமைச்சு
- ✓ மத்திய சுற்றாடல் அதிகார சபை
- ✓ வனப் பாதுகாப்புத் திணைக்களம்
- ✓ வன ஜீவராசிகள் திணைக்களம்

M.H.M Musthanzir

www.lkdu.lk

42. **அரசினால் மேற்கொள்ளப்பட்ட சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டங்களை தருக.**

- ✓ சிரேஷ்ட பிரஜைகளுக்கான நலன்புரி வேலைத்திட்டம்
- ✓ முதியோர் பராமரிப்பு இல்லங்களை நடாத்துதல்
- ✓ வீடுகள் வழங்கும் வேலைத்திட்டம்

43. **பொதுச்சேவைகள் வழங்கும் நிறுவனங்களையும் அவற்றின் கடமைகளையும் தருக.**

| பொதுச் சேவைகள் | வழங்குகின்ற நிறுவனங்கள் | நிறைவேற்ற வேண்டிய கடமைகளும், பொறுப்புகளும் |
|---|---|---|
| நீர் வழங்கல் | தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை | • சுத்தமான குடிநீரை வழங்குதல்<br>• சேவைகளை இடையறாது வழங்குதல்<br>• நீர் விரயத்தைத் தவிர்த்தல்<br>• உரிய வகையில் நடைமுறைப்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் |
| மின்சாரம் | இலங்கை மின்சார சபை | • இடையறாது சேவைகளை வழங்குதல்<br>• உரிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்<br>• பாதுகாப்பை உறுதிப்படுத்தல்<br>• மின்வழங்கல் துண்டிக்கப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றை விரைவாக வழமை நிலைக்குக் கொண்டு வருதல் |
| சுகாதார சேவை | அரச வைத்திய சாலைகள்<br>தனியார் வைத்திய சாலைகள் | • நோயாளிகளுக்கு உரிய வகையில் சிகிச்சைளித்தல்<br>• பயன்பாட்டுக்கு உகந்த மருந்து வகைகளைப் பெற்றுக் கொடுத்தல்<br>• தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுத்தல்<br>• நோயாளர் பராமரிப்பும் தேவையான வசதிகளை வழங்குதலும் இடையறாது சேவைகளை வழங்குதல் |
| கல்வி | பாடசாலைகள்<br>பல்கலைக் கழகங்கங்கள்<br>தொழிற் பயிற்சி சுல்வி நிறுவனங்கள் | • சமூகமயமாக்கல்<br>• உரிய வகையில் கல்வியை வழங்குதல்<br>• பயனுள்ள பிரஜைகளை உருவாக்குதல்<br>• கல்வியின் மூலம் தேர்ச்சிகளை உருவாக்குதல் |
| போக்குவரத்து | இலங்கை போக்குவரத்துச் சபை<br>தனியார் பேருந்து சேவை<br>இலங்கை புகையிரத சேவை | • சேவைக்குறிய கட்டணத்தை மாத்திரம் அறவிடுதல்<br>• கட்டணங்களுக்குறிய அனுமதிச சீட்டை விநியோகித்தல்<br>• பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்<br>• சேவைகளை வினைத்திறனான வகையில் மேற்கொள்ளல் |

M.H.M Musthanzir

STUDY ONLINE

# இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்




## இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

**WWW.LKEDU.LK**

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkdu.lk

| | | |
|---|---|---|
| தகவல் பரிமாற்றமும் தொடர்பாடலும் | அஞ்சல் சேவை ஊடக நிறுவனங்கள் (இலத்திரனியல் அச்சு) | • வினைத்திறனாகவும் முறையாகவும் சேவையை வழங்குதல்<br>• உண்மையான தகவல்களை மக்களுக்கு வழங்குதல்<br>• பக்கச்சார்பின்றி தகவல்களை வழங்குதல்<br>• தரமான சேவையை வழங்குதல் |
| பாதுகாப்புச் சேவை | பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிஸ் | • மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்<br>• மக்களுடன் சுமுகமான தொடர்புகளைப் பேணுதல்<br>• சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாத்தல்<br>• சட்டங்களையும் ஒழுங்கினையும் மதிக்கக்கூடிய வகையில் முன்மாதிரியாகச் செயற்படல் |
| கூட்டுறவு | கூட்டுறவுச் சங்கங்கள் பலநோக்கு கூட்டுறவு சங்கம் | • தரமான சேவைகளை வழங்குதல்<br>• காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப சேவைகளை நவீனமயப்படுத்துதல்<br>• நுகர்வோர் சேவையை குறைந்த விலைகளில் வழங்குதல்<br>• சங்கங்களின் தலைமைத்துவத்திற்கு தெரிவு செய்யப்படுவோர் நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் சங்கத்தின் முன்னேற்றத்திற்காகச் செயற்படல் சுற்றாடல் |
| சுற்றாடல் பாதுகாப்பு | சுற்றாடல் அமைச்சு மத்திய சுற்றாடல் அதிகார சபை வனஜீவராசிகள் திணைக்களம் | • சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக உயர்ந்த பங்களிப்பை வழங்குதல்<br>• சுற்றாடல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக உயர்ந்த பங்களிப்பை வழங்குதல்<br>• சுற்றாடல் பாதிப்பு தொடர்பாக மக்களின் முறைப்பாடுகளை உரியவாறு பரிசீலித்து பதில் வழங்குதல்<br>• சுற்றாடல் பாதுகாப்பின் முக்கியத்துவம் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டல் |

M.H.M Musthanzir

www.lkdu.lk

44. **பொதுச்சேவைகளை பயன்படுத்துவது தொடர்பாக பிரஜைகள் நிறைவேற்றவேண்டிய கடமைகளை தருக.**

| **பொதுச் சேவைகள்** | **சேவைகளைப் பயன்படுத்தும் பிரஜைகளினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள்** |
|---|---|
| நீர் வழங்கல் | • நீரை வீண் விரயமின்றிப் பயன்படுத்துதல்<br>• முறையற்ற விதத்தில் நீரைப் பயன்படுத்தாதிருத்தல்<br>• உரிய வகையில் நீர்க் கட்டணத்தைச் செலுத்துதல்<br>• நீர் வழங்கலுடன் தொடர்புபட்ட உபகரணங்களைப் பாதுகாத்தல் |
| மின்சாரம் | • மின்சாரத்தை விரயமின்றிப் பயன்படுத்துதல்<br>• மின் வழங்கலுடன் தொடர்புபட்ட உபகரணங்களைப் பாதுகாத்தல்<br>• மின்கட்டணத்தை உரிய காலத்தினுள் செலுத்துதல்<br>• சட்ட விரோதமான வகையில் மின்சாரத்தைப் பயன்படுத்தாதிருத்தல் |
| சுகாதாரம் | • வைத்திய ஆலோசனைகளைக் கடைப்பிடித்தல்<br>• சேவை வழங்கக்கூடிய பணியாளர்களுக்கு மதிப்பளித்தல்<br>• இலவசமாக வழங்கப்படும் மருந்துகளை வீண்விரயம் செய்யாதிருத்தல்<br>• சேவை வழங்கும் நிறுவனத்தின் சொத்துகளைப் பாதுகாத்தல் |
| கல்வி | • உரிய முறையில் கல்வி நவடிக்கைகளில் ஈடுபடல்<br>• தமதும் தமக்கு கல்வி வழங்குகின்ற நிறுவனங்களினதும் கௌரவம் பாதுகாக்கப்படும் விதத்தில் செயற்படல்<br>• ஆசிரியர்களது கௌரவத்தைப் பாதுகாக்கும் விதத்தில் செயற்படல்<br>• ஏனைய மாணவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் விதமாகச் செயற்படல் |
| போக்குவரத்து | • போக்குவரத்துச் சேவையுடன் தொடர்புடைய உடமைகளைப் பாதுகாத்தல்<br>• சேவைக்குரிய கட்டணங்களைச் செலுத்துவதற்கு நேர்மையாகச் செயற்படல்<br>• போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்தும்போது அதற்குரிய சட்டம், ஒழுங்குகளைப் பின்பற்றுதல்<br>• பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதனால் தமக்கும் நாட்டிற்கும் கிடைக்கின்ற பயன்கள் குறித்து புரிந்துணர்வுடன் செயற்படல் |
| தகவல் பரிமாற்றமும் தொடர்பாடலும் | • தொடர்பாடல் சேவைகளைப் பிறருக்குப் பாதிப்பின்றி பயன்படுத்துதல்<br>• தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது ஆராய்ந்து செயற்படல்<br>• முன்மாதிரியாகச் செயற்படல் |

M.H.M Musthanzir

www.lkdu.lk

| | |
|---|---|
| | • சமூகத் தேவைகள் தொடர்பாக ஊடகங்கள் மூலம் உரிய துறைகளில் கவனம் செலுத்துதல் |
| பாதுகாப்புச் சேவை<br>உ+ம்:<br>இலங்கை பொலிஸ் திணைக்களம் | • குற்றச்செயல்கள், சமூகவிரோதச் செயல்கள் என்பனவற்றைத் தடுப்பதற்கு உதவுதல்<br>• பொலிசாரும் பாதுகாப்புப் படையினரும் ஒத்துழைப்புடன் செயற்படல்<br>• சட்டத்தினை மதிக்கின்ற பிரஜைகள் என்ற வகையில் செயற்படல் |
| கூட்டுறவுச் சேவை | • கூட்டுறவு இயக்கத்தின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ளல்<br>• அங்கத்துவம் வகிக்கின்ற சங்கம் / சங்கங்களின் கூட்டங்களில் தொடர்ச்சியாகப் பங்குபற்றல்<br>• நேர்மையான, வினைத்திறனானதுமான உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைத்துவத்துக்குத் தெரிவு செய்யப்படுதல்<br>• ஒருவருக்கொருவர் உதவுதல் |
| சுற்றாடல் பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்கள் | • சுற்றாடல் பாதுகாப்புக்கு உதவுதல்<br>• சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நபர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு நடவடிக்கையெடுத்தல்<br>• சுற்றாடல் பாதுகாப்புடன் தொடர்புடைய சட்ட திட்டங்களைப் பின்பற்றுதல்<br>• சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக அறிவூட்டுதல் |

M.H.M Musthanzir

www.kdu.lk

# 02 ஜனநாயக மக்கள் சமுகம்

**1. ஜனநாயகம் என்றால் என்ன?**

- ✓ ஓர் ஆட்சி முறையாகவும் வாழ்க்கை முறையாகவும் விளங்குகின்றது.

**2. ஜனநாயக பண்புகள் 4 தருக.**



- ✓ சுதந்திரம் மற்றும் சமத்துவம்
- ✓ ஒத்துழைப்பு
- ✓ பெரும்பான்மைக் கருத்துக்கு மதிப்பளித்தல்
- ✓ சுய ஒழுக்கத்துடனும் இணக்கத்துடனும் வாழ்தல்

**3. குடும்பத்தின் வகைகளை தந்து விளக்குக.**

- ✓ கருக் குடும்பம் - தாய், தந்தை, பிள்ளைகள்
- ✓ விரிந்த குடும்பம் - தாய், தந்தை, தாத்தா, பாட்டி, மாமா, மாமி

**4. குடும்பத்தில் காணப்படும் ஜனநாய பண்புகள் 4 தருக.**

- ✓ அன்பையும் அரவணைப்பையும் குறைவின்றிப் பெறல்
- ✓ நமது உரிமைகளை அனுபவித்தலும் கடமைகளை நிறைவேற்றலும்
- ✓ கலந்துரையாடல் மூலம் தீர்மானத்திற்கு வரல்
- ✓ சமத்துவத்தின் அடிப்படையில் செயற்படுதல்

**5. குடும்பத்தின் மூலம் பிள்ளைகள் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் 4 தருக.**

- ✓ அன்பு, ஆதரவு, கருணை, இரக்கம், பாதுகாப்பு, போசணை

**6. குடும்ப அங்கத்தவர்கள் கலந்துரையாடி தீர்மானத்திற்கு வரும் சந்தர்ப்பங்கள் 4 தருக.**

- ✓ வைபவங்களை ஏற்பாடு செய்தல்
- ✓ காணி அல்லது வீடு வாங்குதல்
- ✓ வீடொன்றைக் கட்டுதல், மற்றும் புனர்நிர்மாணம் செய்தல்
- ✓ வாகனம் வாங்குதல்

**7. குடும்ப அங்கத்தவர்கள் கலந்துரையாடுவதால் கிடைக்கும் நன்மைகள் 3 தருக.**

- ✓ பிறருடைய கருத்துகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் மற்றவர்களுக்கு மதிப்பளிக்கப்படுகின்றது
- ✓ பிறருடைய கருத்துகளை மதிப்பதன் மூலம் பெரும்பான்மைக் கருத்துக்கு மதிப்பளிக்கும் பழக்கம் ஏற்படுகின்றன
- ✓ பெரும்பான்மைக் கருத்துக்களை மதிப்பதன் மூலம் குடும்பத்தினுள் ஒத்துழைப்பு, ஐக்கியம் என்பன விருத்தியடைகின்றன

**8. பாடசாலையில் காணப்படும் ஜனநாயக பண்புகள் 4 தருக.**



- ✓ கலந்துரையாடல் மூலம் சரியான தீர்மானத்திற்கு வருதல்
- ✓ பெரும்பான்மைக் கருத்துகளை கேட்டறிதலும் ஏற்றுக்கொள்ளலும்
- ✓ ஒத்துழைப்புடன் செயற்படுதல்
- ✓ தலைமைத்துவத்திற்கு மதிப்பளித்தல்

**9. பாடசாலையில் சமவாய்ப்பு காணப்படுகின்றது என்பதற்கு உதாரணங்கள் தருக.**

- ✓ இலவசப் பாடநூல்கள்
- ✓ இலவச சீருடை
- ✓ வாசிக சாலை
- ✓ விளையாட்டு மற்றும் வேறு வசதிகள்

M.H.M Musthanzir

www.lkdu.lk

**10. ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமை சாசனத்திற்கு அமைய சிறுவர்கள் யார்?**

- ✓ 18 வயதிலும் குறைந்தோர் சிறுவர்கள் என ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

**11. சிறுவர் உரிமைகள் 4 தலைப்புக்களாக பிரிக்கப்பட்டுள்ளன. அவை எவை?**

- ✓ பாதுகாப்பிற்கான உரிமை
- ✓ பங்குபற்றலுக்கான உரிமை
- ✓ அபிவிருத்திக்கான உரிமை
- ✓ வாழ்வதற்கான உரிமை

**12. ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமையில் எத்தனை உறுப்புரைகள் காணப்படுகின்றன?**

- ✓ ஒரு முன்னுரையையும் 54 உறுப்புரைகளையும்

**13. சிறுவர் உரிமைகளை பாதுகாக்க காணப்படும் சர்வதேச அமைப்பு எது?**

- ✓ ஐக்கிய நாடுகளின் சர்வதேச சிறுவர் நிதியம் (யுனிசெப்)

**14. சிறுவர் உரிமைகள் 4 தந்து அவற்றை அனுபவிக்கும் சிறுவர்கள் ஆற்றவேண்டிய கடமைகள் எவை?**

| சிறுவர் உரிமைகள் | சிறுவர் கடமைகள் |
|---|---|
| கல்வி பெறல் | • கல்வி நடவடிக்கைகளில் சிறப்பாக ஈடுபடல்<br>• ஆசிரியர்களுக்கு மதிப்பளித்தல்<br>• பாடசாலை ஒழுக்கங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் சம்பிரதாயங்களைப் பாதுகாத்தல் |
| சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்ளல் | • தனிப்பட்ட சுகாதாரம் தொடர்பான அறிவைப் பெறல்<br>• பயனுள்ள சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுதல்<br>• சுகாதாரப் பழக்கவழக்கம் தொடர்பாக அறிவூட்டம் பெறல் |
| சுதந்திரமாக கருத்துகளை வெளியிடல் | • உண்மையான கருத்துகளை வெளியிடல்<br>• பிறருக்கு பாதிப்பு ஏற்படுத்தாத கருத்துகளை வெளியிடல் |
| உரிய பாதுகாப்பு கிடைக்கப் பெறல் | • பெற்றோருக்கும் மூத்தோருக்கும் மதிப்பளித்தலும் உரிய இடத்தை வழங்குதலும்<br>• இயலுமான எல்லாசந்தர்ப்பங்களிலும் அவர்களுக்கு உதவுதல் |

**15. சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை?**



- ✓ பல்வேறு துஷ்பிரயோக நடவடிக்கைகளுக்கு உட்படுத்துதல்
- ✓ சித்திரவதை செய்தல்
- ✓ பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாதல்
- ✓ வேலைகளில் ஈடுபடுத்துதல்

**16. சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான காரணங்கள் எவை?**

- ✓ பெற்றோரின் பிரிவினைகள், இறப்பு, அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லல்
- ✓ போதைப் பொருள்களுக்கு அடிமையாதல்
- ✓ வறுமை

M.H.M Musthanzir

www.lkdu.lk

**17. .சிறுவர் உரிமைகளை பாதுகாக்க காணப்படும் நிறுவனங்களை தருக.**

- ✓ தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
- ✓ சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புத் திணைக்களம்
- ✓ சிறுவர் மற்றும் மகளிர் விவகாரம் தொடர்பான செயலணி (இலங்கை பொலிஸ்)

**18. பிரதேச மட்டத்தில் சிறுவர்கள் மற்றும் குடும்பநல சேவைகளை வழங்கும் அதிகாரிகளையும் கடமைகளையும் தருக.**

| பதவி | காரியாலயம் | வழங்கப்படும் சேவைகள் |
|---|---|---|
| சிறுவர் உரிமைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் | பிரதேசச் செயலகம் | • பிள்ளைகளின் உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சகல சேவைகள் மற்றும் ஒருங்கிணைப்பு உதவிகளை வழங்குதல் |
| பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் | பிரதேசச் செயலகம் | • பிள்ளைகளின் பாதுகாப்புடன் தொடர்புடைய பிரச்சினைகளை விசாரணை செய்தல் மற்றும் உதவி வழங்குதல் |
| முன்பிள்ளைப் பருவ அபவிருத்தி உத்தியோகத்தர் | பிரதேசச் செயலகம் | • முன்பள்ளிக் கல்வி மற்றும் வேறு முன்பிள்ளைப் பருவம் தொடர்பான சேவைகளை வழங்குதல் |
| சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் ஆலோசகர் | பிரதேசச் செயலகம் | • பிள்ளைகள், மகளிருடன் தொடர்புடைய ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் |
| சமூக சேவைகள் உத்தியோகத்தர் | பிரதேசச் செயலகம் | • பிள்ளைகளை உள்ளடக்கிய அரசாங்கத்தின் விஷேட சமூக நலன்புரிச் சேவைகளை வழங்குதல் |
| மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் | பிரதேசச் செயலகம் | • மகளிர் பெண்பிள்ளைகள் தொடர்பான மனைப் பொருளியல் மற்றும் தொழிற் கல்விச் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல் |
| முறைசார் மற்றும் முறை சாரா கல்வி உத்தியோகத்தர் | கோட்டக் கல்வி அலுவலகம், வலயக் கல்வி அலுவலகம் | • பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகள் தொடர்பாக அவசியமான சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல் |

**19. மனவெழுச்சிகளுக்கு உதாரணங்கள் தருக.**

- ✓ மகிழ்ச்சி, கோபம், பயம், துக்கம்



M.H.M Musthanzir

www.lkdu.lk

**20. மனவெழுச்சிகளை தந்து அதன் விளைவுகளையும் தருக.**

| மனவெழுச்சி | விளைவுகள் |
|---|---|
| மகிழ்ச்சி | சிரித்தல், ஆடுதல், கைதட்டுதல், ஆனந்தக் கண்ணீர் சிந்துதல், குரலெழுப்புதல் |
| துக்கம் | அழுகை, ஒப்பாரி வைத்தல், முகத்தைச் சுருக்குதல், வயிற்றிலடித்துக் கொள்ளல், கண்கள் சிவத்தல், வியர்வை வெளியேறல், பெருமூச்சுவிடல் |
| கோபம் | தூற்றுதல், தாக்குதல், பேச்சுத் திக்குதல், பல்லைக் கடித்தல், மௌனமாக இருத்தல், உதடுகள் கைகால்கள் நடுங்குதல் |
| பயம் | உடல் நடுங்குதல், கூக்குரலிடல், கண்கள் விரிவடைதல், ஓடுதல், நாக்குழறுதல் |

**21. மனவெழுச்சி காரணமாக உடலில் ஏற்படும் மாற்றங்கள் 02 தருக.**

- ✓ இதயத்துடிப்பு அதிகரித்தல், ஓமோன்கள் சுரத்தல்

**22. பாதகமான மனவெழுச்சிகளை கட்டுப்படுத்தாவிட்டால் ஏற்படும் விளைவுகளை தருக.**



- ✓ மனநோய்
- ✓ உடலியல் நோய்களுக்கு உள்ளாகுதல்
- ✓ சிறைத்தண்டனை அனுபவித்தல்
- ✓ போதைப்பொருள்களுக்கு அடிமையாதல்
- ✓ தற்கொலை செய்து கொள்ளல்

**23. பாதகமான மனவெழுச்சிகளை சமநிலைப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை தருக.**

| | |
|---|---|
| மனதை ஒருநிலைப்படுத்தும் பயிற்சிகளில் ஈடுபடல் | • தியானத்தில் ஈடுபடல்<br>• பூக்கன்றுகளை வளர்த்தல்<br>• இயற்கையை இரசித்தல் |
| நண்பர்களுடன் உறவாடுதல் | • கலந்துரையாடுதல்<br>• ஒருவருக்கொருவர் உதவுதல்<br>• பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடல் |
| பாதகமான மனவெழுச்சிகளை ஏற்படுத்தக்கூடிய நபர்களையும் சூழலையும் மாற்றிக் கொள்ளுதல் | • வீட்டையும் அலுவலகத்தையும் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருத்தல்<br>• சமத்துவமின்மை, வேறுபாடுகளைக் குறைத்தல்<br>• நட்புறவுடனும் ஒத்துழைப்புடனும் செயற்படுதல் |
| ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடல் | • கவிதை, பாடல், கட்டுரை எழுதுதல்<br>• புத்தகங்கள் வாசித்தல்<br>• நாடகம் தயாரித்தல் |

M.H.M Musthanzir

www.lkdu.lk



**24. மனவெழுச்சிகளை பயனுள்ளதாக மாற்றுவதன் மூலம் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படும் என்ற கூற்றுக்கு உதாரணங்கள் தருக.**

- ✓ பிறருடைய மனதை புண்படுத்தாத ஒருவராக இருப்பீர்
- ✓ பிறருடன் ஒத்துழைப்புடனும் சமாதானத்துடனும் செயற்படுவீர்
- ✓ நம்பிக்கைக்கும் கௌரவத்திற்கும் பாத்திரமாக விளங்குவீர்

**25. தலமைத்துவம் என்றால் என்ன?**

- ✓ தலைமைத்துவம் என்பது, தெளிவான குறிக்கோள்களை அடையும் பொருட்டு மக்களை ஈடுபடுத்துதல் மற்றும் வழிநடத்துகின்ற செயற்பாடாகும்

**26. சமுகதத்தில் தலைமைத்துவத்தை இணங்கானக்கூடிய சந்தர்ப்பங்களை தருக.**

- ✓ **குடும்பத்தில்** - பெற்றோர், மூத்த பிள்ளைகள்
- ✓ **பாடசாலையில்** - அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், பகுதித் தலைவர்கள்,
- ✓ **சமூகத்தில்** - சமயத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள்

**27. தலைவர்களிடம் காணப்படும் பண்புகளை தருக.**

| | |
|---|---|
| தொடர்பாடல் திறன் | தொடர்பாடல் திறன்<br>முன்வைத்தல், விளக்கமளித்தல், பேச்சாற்றல்.<br>ஒழுங்குமுறையைக் கட்டியெழுப்புதல், செவி மடுத்தல், நிலையான தன்மை |
| பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் | பிரச்சினைகளை உரிய வகையில் அறிந்து கொள்ளல், தகவல் சேகரித்தல், ஆராய்தல், தீர்வினைத் தேடுதல், நடைமுறைப்படுத்தல் |
| திட்டமிட்டும் திறன் | குறிக்கோளை முடிவு செய்தல், ஒழுங்குபடுத்துதல், தீர்மானத்திற்கு வருதல் |
| நடைமுறைப்படுத்தும் திறன் | குறிக்கோளைத் தீர்மானித்தல், குழுக்களை ஏற்படுத்தல், நிருவகித்தல், இலக்கினை அடைதல் |

**28. 4 வகை தலைமைத்துவ பாங்குகளை தந்து அதன் பண்புகளை தருக.**

| | |
|---|---|
| ➢ **சர்வாதிகாரத் தலைமைத்துவப்பாங்கு**<br>1. பொதுமக்களின் கருத்துகளை ஏற்றுக் கொள்ளாமை<br>2. மாற்றத்தை விரும்பாமை<br>3. மிகவும் கொடூரமாகச் செயற்படுதல்<br>4. தனித்துத் தீர்மானமெடுத்தல் | ➢ **முறைகேடான தலைமைத்துப்பாங்கு**<br>1. பொது வளங்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்<br>2. ஊழல், மோசடி, துஷ்பிரயோகங்களில் ஈடுபடல்<br>3. பிழையான முன்னுதாரணமாக விளங்குதல்<br>4. சட்டதிட்டங்கள், சம்பிரதாயங்களை மதிக்காமை |
| ➢ **பெயரளவிலான தலைமைத்துவப்பாங்கு**<br>1. மக்கள் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை<br>2. சிறந்த தலைமைத்துவப் பண்புகளிலிருந்து நீங்கியவராக இருத்தல்<br>3. தெளிவான குறிக்கோள்களற்றவராக விளங்குதல்<br>4. மாற்றங்களை ஏற்படுத்த விரும்பாமை | ➢ **ஜனநாயகத் தலைமைத்துவப்பாங்கு**<br>1. மக்கள் கருத்துகளை ஏற்றுக் கொள்ளலும், மதித்தலும்<br>2. மக்களுடன் மிகவும் நெருக்கமாகப் பழகுதல்<br>3. பிரச்சினைகளைச் செவிமடுத்தலும், தீர்வு காணுதலும்<br>4. மக்களின் உணர்வுகளை அறிந்து கொள்ளலும் மதித்தலும் |

M.H.M Musthanzir




zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkdu.lk

**29. தலைவர் ஒருவர் ஏன் அவசியம் என்பதற்கான காரணங்களை தருக.**

- ✓ சவால்களையும், எதிர்ப்புக்களையும் வெற்றி கொள்ளல்
- ✓ சவால்களையும், எதிர்ப்புக்களையும் ஜனநாயக ரீதியாக நிருவகித்தல்
- ✓ பின்பற்றுவோருக்கு வேலைகளைப் பகிர்ந்தளித்தல்
- ✓ பின்பற்றுவோரைத் தெளிவுபடுத்துதல்



**30. ஜனநாயக ஆட்சி இடம்பெறும் நாடுகளைத் தருக.**

- ✓ ஐக்கிய அமெரிக்க நாடுகள்
- ✓ பிரித்தானியா
- ✓ பிரான்ஸ், சுவிட்சர்லாந்து
- ✓ இந்தியா மற்றும் இலங்கை

**31. ஜனநாயக தலைவரிடம் காணப்படுகின்ற பண்புகளை தருக.**

- ✓ மனிதநேயம்
- ✓ தன்னம்பிக்கை
- ✓ நேர்மை
- ✓ உறுதிப்பாடு



**32. தலைவர் மற்றும் பின்பற்றுபவர் என்றால்?**

- ✓ தலைவர் குழுவை வழிநடத்துவார்
- ✓ பின்பற்றுபவர் தலைவரின் வழிகாட்டலுக்கு ஏற்ப செயற்படுவார்
- ✓ தலைவர் குழுவை வழிநடாத்தும்போது பின்பற்றுபவர் நம்பிக்கையுடன் செயற்படுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்
- ✓ தலைவர் சரியான இலக்கினை அடைவதற்கு பின்பற்றுவோர் பிரதிபலனை எதிர்பாராது உதவுவது கடமையாகும்
  சிறந்த தலைவர் ஒருவராக மாறுவதற்கு சிறந்த பின்பற்றுபவராகச் செயற்பட

**33. குடும்பம், பாடசாலை, சமூகம் என்பவற்றில் தலைவர்களையும் பின்பற்றுவோர்களையும் உள்ளடக்கிய பல குழுக்கள் காணப்படுகின்றது. அவற்றுக்கு உதாரணங்கள் தருக.**

| தலைவர் | பின்பற்றுவோர் |
|---|---|
| தந்தை | குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்கள் |
| அதிபர் | ஆசிரியர் குழாம், மாணவர்கள் |
| சமயத் தலைவர்கள் | ஏனைய சமயத் தலைவர்களும், சீடர்களும் |
| வேட்பாளர் | வாக்காளர் |
| ஜனாதிபதி | நாட்டின் பிரஜைகள் |

**34. பாடசாலையில் காணப்படுகின்ற தலைவர்களையும் பின்பற்றுவோர்களையும் தருக.**

| தலைவர் | பின்பற்றுவோர் |
|---|---|
| அதிபர் | ஆசிரியர்குழாம், மாணவ மாணவியர் |
| வகுப்பாசிரியர் | வகுப்பு மாணவர் |
| மாணவத் தலைவர் | பாடசாலை மாணவர்கள் |
| வகுப்பபுத் தலைவர் | வகுப்பு மாணவர் |
| பாடத் தலைவர் | பாடத்தினைக் கற்கும் மாணவர் |

M.H.M Musthanzir

www.lkdu.lk



**35. ஜனநாயக வாழ்வுடன் தொடர்புடைய பண்புகள் 4 தருக.**

- ✓ பெரும்பான்மைக் கருத்துகளுக்கு மதிப்பளித்தல்
- ✓ ஒத்துழைப்புடன் செயற்படுதல்
- ✓ உரிமைகளை அனுபவிப்பதுடன் கடமைகளையும் நிறைவேற்றுதல்
- ✓ கலந்துரையாடல் மூலம் தீர்மானங்களை மேற்கொள்ளல்

**36. ஜனநாயக வாழ்க்கை முறை சமுகத்தின் சிறப்பான செயற்பாட்டிற்கு உதவும் முறைகளை தருக.**

| | |
|---|---|
| மக்கள் சமூகத்தில் நல்லெண்ணத்தை விருத்தி செய்தல் | • ஒவ்வொரு மக்கள் குழுவினரும் சமமாகக் கருதப்பட்டு மதிக்கப்படுவதனால் தொடர்புகள் விருத்தியடைதல்<br>• தமது தேவைகள் எதிர்பார்க்கின்ற அளவில் நிறைவேறுவதனால் மக்கள் திருப்தியடைதல்<br>• சகல நடவடிக்கைகளிலும் சகலரினதும் பங்குபற்றுதலும் பிரதிநிதித்துவமும் கிடைக்கப்பெறல் |
| முரண்பாடுகளற்ற சமூகமொன்று உருவாதல் | • பெரும்பான்மைக் கருத்துக்கு மதிப்பளித்தல்<br>• சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்திற்கு இடமளித்தல்<br>• சகல மக்கட் குழுக்களுக்கும் பண்பாடுகளுக்கும் கௌரவமளித்தல் |
| சட்டங்களை மதிக்கின்ற சமூகம் உருவாதல் | • பிரஜைகள் சட்டத்தை மதித்தல்<br>• எளிமையாகவும் சமாதானமாகவும் செயற்படல்<br>• ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளலும் கௌரவமளித்தலும் |
| சகலரதும் உரிமைகள் பாதுகாக்கப்படல் | • உரிமைகள் அங்கீகரிக்கப்படல்<br>• கடமைகள் நிறைவேற்றப்படல்<br>• சுதந்திரத்தை அனுபவித்தல் |

M.H.M Musthanzir

www.lkdu.lk

# 03 பல்பண்பாட்டு மக்கள் சமூகம்

**01. பண்பாடு என்றால் என்ன?**

- ✓ சமூக அங்கத்தவர் ஒருவர் என்ற வகையில் மனிதனால் உரிமையாக்கிக் கொண்டதும் பெற்றுக் கொண்டதுமான அறிவு, நம்பிக்கை, கலைகள், ஒழுக்க விழுமியங்கள் மற்றும் ஆற்றல்கள் அனைத்தும் பண்பாடு ஆகும். **E.B. டெய்லர்**

- ✓ மனிதனால் உரிமையாக்கிக் கொள்ளப்பட்டுள்ள அறிவு, நம்பிக்கை, கலாசாரம் பழக்கவழக்கம், வாழ்க்கை முறை முதலிய அனைத்தும் பண்பாடாகும்.

**02. பல்பண்பாட்டு மக்கள் சமூகம் என்றால் என்ன?**

- ✓ ஒரு நாட்டிம் பல்வேறு மொழிகளைப் பேசும், பல்வேறு சமயங்களைப் பின்பற்றும் பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழலாம். அவ்வாறான குழுக்களைக் கொண்ட சமூகம் பல்பண்பாட்டு மக்கள் சமூகம் எனப்படும்.

- ✓ இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் எனும் பல்வேறு இனத்தவர்களும் வாழ்கின்றனர்.
  பௌத்தம், இந்து, இஸ்லாம். கிறிஸ்தவம் முதலிய சமயங்களைப் பின்பற்றுகின்ற மக்களைப் போலவே சிங்களம். தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைப் பேசுகின்றவர்களும் வாழ்கின்றனர். எனவே இலங்கை பன்பண்பாட்டு சமூகத்தவர்கள் வாழ்கின்ற பல்பண்பாடு கொண்ட நாடாகும்.

**03. பல்பண்பாட்டு சமூகங்களைக் கொண்ட நாடுகள் எவை?**



- ✓ இந்தியா
- ✓ ஐக்கிய அமெரிக்க
- ✓ பிரித்தானியா
- ✓ இலங்கை

**04. பல்பண்பாட்டு சமூகத்தினரிடம் காணப்படும் பண்புகள் எவை?**

- ✓ அனைத்து இன மக்களுக்கும் மதிப்பளித்தல்
- ✓ அனைத்து இன மக்களினதும் உரிமைகளைப் பாதுகாத்தல்
- ✓ எந்தவொரு இனத்தையும் சமயத்தையும் உயர்வானதாக அல்லது தாழ்வானதாகக் கருதாமை
- ✓ அனைத்து சமயங்களினதும் இனங்களினதும் பண்பாட்டு உரிமைகளைப் பாதுகாத்தலும் மதிப்பளித்தலும்
- ✓ தமது கடமைகளை சரிவர நிறைவேற்றுதல்

**05. பல்பண்பாட்டுச் சமூகத்தின் பண்புகள் எவை?**



- ✓ பல்வேறு இனங்கள் ஒருமித்து வாழ்தல்
- ✓ பல்வேறு சமயங்களைச் சார்ந்தவர்கள் வாழ்தல்
- ✓ பல்வேறு மொழிகளைப் பேசுவோர் வாழ்தல்
- ✓ பல்வேறு பழக்கவழக்கங்கள் நிலவுதல்
- ✓ பல்வேறு பண்பாட்டு மரபுரிமைகள் நிலவுதல்

M.H.M Musthanzir

www.lkdu.lk

**06. இலங்கையின் பண்பாட்டுப் பல்வகைமையை அட்டவணைப்படுத்துக.**

| இனம் | சனத்தொகை | சதவீதம் | சமயம் | சனத்தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 15 250 081 | 74.9 | பௌத்தம் | 14 272 056 | 70.1 |
| தமிழர் | 2 269 266 | 11.2 | இந்து | 2 561 299 | 12.6 |
| முஸ்லிம்கள் | 1 892 638 | 9.3 | இஸ்லாம் | 1 967 523 | 9.7 |
| இந்தியத் தமிழர் | 8 39 504 | 4.1 | கத்தோலிக்கம்/ கிறிஸ்தவம் | 1 552 161 | 7.6 |
| புறங்கியர் | 38 293 | 0.2 | | | |
| ஏனையோர் | 106 836 | 0.3 | | | |

குடிசன மதிப்பீடு (2012) சனத்தொகை மதிப்பீட்டுத் திணைக்களம்

- ✓ (சனத்தொகை 20,339,4239)

**07. இலங்கையின் பல்வேறு பண்பாடுகளை பிரதிபலிக்கும் தலங்களைத் தருக.**



- ✓ தலதர மாளிகை
- ✓ ஸ்ரீ மகாபோதி
- ✓ கதிர்காமக் கோயில்
- ✓ திருக் கோணேஸ்வரம் கோயில்
- ✓ மடு தேவாலயம்
- ✓ தவட்டகஹ பள்ளிவாசல்

**08. எமது நாட்டின் சமயத்தை அடிப்படையாகக் கொண்ட கலாசாரங்களைத் தருக.**

- ✓ பௌத்த கலாசாரம்
- ✓ இந்து கலாசாரம்
- ✓ கிறிஸ்தவ / கத்தோலிக்க கலாசாரம்
- ✓ இஸ்லாமிய கலாசாரம்

**09. பௌத்தர்களின் பிரதான சமய விழாக்களை குறிப்பிட்டு விளக்குக.**

- ✓ வெசாக் வைபவம் - புத்த பெருமானின் பிறப்பு, ஞானம்பெறல், பரிநிர்வாணமடைதல் எனும் மூன்று சந்தர்ப்பங்களையும் நினைவுடடல்
- ✓ பொசொன் வைபவம் - இலங்கைக்கு பௌத்த சமயத்தை அறிமுகப்படுத்திய மகிந்த தேரரும் அவரது குழுவினரும் வருகை தந்த தினமாகப் பொசொன் தினம் கருதப்படுகிறது.
- ✓ எசல வைபவம் - சித்தார்த்தர் இல்லறத்தைத் துறந்து ஞானம் பெற்ற பின் புரிந்த முதலாவது உபதேசம் எசல பௌர்ணமி தினமென்பது பௌத்தர்களின் நம்பிக்கையாகும்.

**10. இந்து சமயத்தோடு தொடர்புடைய சமய விழாக்களை தருக.**

- ✓ தைப்பொங்கல் பண்டிகை
- ✓ தீபாவளிப் பண்டிகை
- ✓ மகா சிவராத்திரி





M.H.M Musthanzir

www.lkdu.lk

**11. கிறிஸ்தவ / கத்தோலிக்க சமயத்தோடு தொடர்புடைய சமய விழாக்களை தருக.**

- ✓ நத்தார் பண்டிகை
- ✓ பாஸ்கா நிகழ்வு
    - இயேசு நாதரின் பிறப்பை நினைவுகூர்ந்து ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி நத்தார் அல்லது கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாடப்படும்.
    - இயேசுவை சிலுவையில் அறைந்த நிகழ்வை நினைவூட்டும் வகையில் பெரிய வெள்ளியும் மீண்டும் உயிர் பெற்றதை நினைவூட்டுவதற்கு உயிர்த்த ஞாயிறு தினத்தில் பாஸ்கா வழிபாடும் மேற்கொள்ளப்படுகிறது.

**12. இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றும் முஸ்லிம்களின் சமய விழாக்களை தருக.**

- ✓ மீலாதுன்நபி விழா
- ✓ நோன்புப் பெருநாள்
- ✓ ஹஜ் பெருநாள்

    - முகம்மது நபி அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கும் வகையில் மீலாதுன்நபி விழா கொண்டாடப்படுகிறது.
    - ரமழான் மாதத்தில் முப்பது நாட்கள் பகல் பொழுதுகளில் உண்ணாது பருகாது நோன்பிருந்து அக்காலம் நிறைவுற்றதும் கொண்டாடும் பண்டிகையே நோன்புப் பெருநாளாகும்.
    - முஸ்லிம்களின் புனித பூமியாகிய மக்காவில் அமைந்துள்ள கவ்பா எனும் இறையில்லத்தை தரிசிக்கும் துல்ஹஜ் மாதத்தின் 10 ஆம் நாளின் ஹஜ் பெருநாள் கொண்டாடப்படும்.

**13. இந்தியாவின் பல்கலாசாரப் பண்பாட்டுத் தன்மையை அட்டவணைப்படுத்துக.**

| இனம் | மொழி | சமயம் |
|---|---|---|
| தமிழர், வங்காளியர், முஸ்லிம், சீக்கியர் மலையாளிகள், தெலுங்கர், மராட்டியர், முன்டா, சக்மா | ஹிந்தி, உருது, தமிழ், மராட்டி, பஞ்சாபி, தெலுங்கு ஆங்கிலம், மலையாளம், குஜராத்தி, கன்னடம், சமஸ்கிருதம் | இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம், சீக்கியம் |

**14. பல்பண்பாடு கொண்ட நாடொன்றாகப் பரிணமிப்பதற்கு இந்தியா பின்பற்றுகின்ற செயற்பாடுகள் எவை?**

- ✓ அனைந்து இனங்கள், சமயங்கள், மொழிகள் ஆகியன சமமாக மதிக்கப்படுகின்றமை
- ✓ அரச கரும மொழியாக இந்தியும் இணைப்பு மொழியாக ஆங்கிலமும் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை.
- ✓ ஒவ்வொரு பிரஜையும் அரச கரும மொழி தவிர்ந்த வேறு மொழியொன்றைத் தெரிந்திருத்தல்
- ✓ தமது சமயத்தைப் பின்பற்றும் உரிமையையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல்

M.H.M Musthanzir

www.lkdu.lk

**15. ஐக்கிய அமெரிக்காவின் பல்கலாசாரப் பண்பாட்டுத் தன்மையை அட்டவணைப்படுத்துக.**

| இனம் | மொழி | சமயம் |
|---|---|---|
| வெள்ளையர் கறுப்பர் ஆரியர், செவ்விந்தியர் அலாஸ்காவின், ஹவாஸ் தீவினர், பசுபீக் வலயத்தினர் | ஆங்கிலம், ஸ்பானியமொழி, சமோன் மொழி, கமறுமொழி, கரோகி மொழி ஹவாய் மொழி | உரோமன் கத்தோலிக்கம் புாட்டஸ்தாந்து, இஸ்லாம், பௌத்தம், இந்து, யூதம் |

**16. பல்பண்பாடு கொண்ட நாடொன்றாகப் பரிணமிப்பதற்கு ஐக்கிய அமெரிக்கா பின்பற்றுகின்ற செயற்பாடுகள் எவை?**

- ✓ ஆங்கிலத்தை அரசகரும மொழியாக ஏற்றுக் கொண்டமை.
- ✓ எந்தவொரு சமயத்தையும் அரச சமயாமாக அங்கீகரிக்காமை
- ✓ எல்லாப் பிரஜைகளுக்கும் சமவுரிமை வழங்கப்பட்டுள்ளமை
- ✓ ஜனநாயகத்தை ஏற்று அதற்கேற்ப செயற்படுதல்

**17. தேசிய உணர்வுடன் செயற்படுவதற்கு பின்பற்ற வேண்டிய விடயங்கள் எவை?**

- ✓ ஒருவரையொருவர் புரிந்து கொள்வதால் முரண்பாடுகள் குறைவடையும்.
- ✓ இனங்களிடையே ஒற்றுமை உறுதிப்படுத்தப்படும்
- ✓ நாட்டை அபிவிருந்தி செய்வதற்கு அனைவரினதும் பங்களிப்பு கிடைக்கும்
- ✓ ஒற்றுமையாகவும் இணக்கமாகவும் செயற்படுவதற்குத் தூண்டப்படுவர்.
- ✓ நிலையான சமாதானத்தை நிலைபெறச் செய்தல்







M.H.M Musthanzir

www.lkdu.lk

# 04 சமகாலப் பிரச்சினைகள்

**01. சமூகத்தின் நிலையான பாதுகாப்புக்குச் சவாலாக இருக்கும் முக்கிய நிகழ்வுகள் எவை?**

- ✓ இயற்கை அனர்த்தங்கள்
- ✓ விபத்துகள்
- ✓ முறையற்ற மனித பழக்கங்கள்

**02. நாம் எதிர்கொள்ளும் அனர்த்தங்கள் மற்றும் விபத்துகளின் தன்மைக்கு ஏற்ப அவற்றின் பிரிவுகளைத் தருக.**



- ✓ இயற்கை அனர்த்தங்கள்
- ✓ மனிதச் செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அவர்த்தங்கள்

**03. இயற்கை அனர்த்தங்களுக்கு உதாரணங்கள் தருக.**

- ✓ சுனாமி
- ✓ வெள்ளப்பெருக்கு
- ✓ வறட்சி
- ✓ மின்னல்

**04. மனிதச் செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்களுக்கு உதாரணங்கள் தருக.**

- ✓ வாகன விபத்துக்கள் (உயிரிழப்பு)
- ✓ பாதுகாப்பற்ற கட்டடங்கள் (வெள்ளப்பெருக்கு)
- ✓ அதிகளவான இரசாயனப் பாவனை (சிறுநீரக நோய்)
- ✓ கழிவுப்பொருட்களை முறையற்ற விதத்தில் அகற்றுதல் (டெங்கு அபாயம்)

**05. இயற்கை அனர்த்தங்கள் என்றால் என்ன?**

- ✓ மனிதர் தலையீடின்றி இயற்யை சூழலில் நிகழும் பல்வேறு மாற்றங்களினால் இயற்கையாக ஏற்படும் செயற்பாட்டால் மனிதனுக்கும் அவனது சொத்துகளுக்கும் பாதிப்புகள் ஏற்படுமாவின் அவை..

**06. இயற்கை அனர்த்தங்களின் வகைகளைத் தருக.**

- ✓ புவியினுள் நிகழும் பௌதிகச் செயற்பாடுகள் (சுனாமி புவியதிர்வு நிலச்சரிவு)
- ✓ காலநிலை மற்றும் வானிலையில் ஏற்படும் மாற்றங்கள் (வெள்ளப்பெருக்கு, வறட்சி)

➢ அதிக மழைவீழ்ச்சி மற்றும் ஆற்றுப் பெருக்கு என்பன வெள்ளப்பெருக்கு எற்படுவதற்கான இயற்கைக் காரணிகளாகும். இவை தவிர முறையற்ற ரீதியிலான நகர் அபிவிருத்தி வடிகாலமைப்பு முறைகளின் சீரற்ற தன்மை, நதிகளின் இரு கரைகளிலும் அத்துமீறிய வகையில் கட்டடங்களை அமைத்தலும் சேரிகளில் குப்பை கூளங்களை இடுதல் போன்ற மனித நடவடிக்கைகள் வெள்ளப் பெருக்கிற்கான காரணங்களாகும்.

**07. வெள்ளப்பெருக்கு ஏற்பட காரணமான மனிதச் செயற்பாடுகள் எவை?**

- ✓ காடுகள் அழிக்கப்படுதல்
- ✓ ஆறுகளில் மணல் அகழ்தல்
- ✓ சுரங்க அகழ்வுகளை மேற்கொள்ளல்
- ✓ சதுப்பு நிலங்களில் மண் நிரப்புதல்



M.H.M Musthanzir

www.lkdu.lk

**08. வெள்ளப்பெருக்கால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எவை?**

- ✓ வெள்ள நீரிலிருந்து விலகி பாதுகாப்பான பகுதிகளுக்கு விரைவாகச் செல்லல்
- ✓ வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நடந்தோ, வாகனங்களிலோ செல்லாதிருந்தல்
- ✓ கீழே அறுந்து விழுந்துள்ள மின்சாரக் கம்பங்களுக்கு அருகில் செல்லாதிருத்தல்
- ✓ வெள்ள நீரைப் பயன்படுத்தாதிருத்தல்
- ✓ உரிய நிறுவனங்களால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல்
    - அனர்த்த முகாமைத்துவ நிலையம்
    - வளிமண்டயவியல் திணைக்களம்
    - பொலிஸ் நிலையம்
    - உள்ளூராட்சி நிறுவனங்கள்



**09. சூறாவளி பற்றி விளக்குக.**

- ✓ அயனக் காலநிலை வலயங்களில் மிக வேகமாக உருவாகி பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய காற்றே **சூறாவளி** எனப்படும்.
- ✓ இது வளிமண்டலத்தில் தாழமுக்கத்தைக் கொண்ட பிரதேசத்தை மையமாகக் கொண்டு உருவாகும். இடம் சுழியாக அல்லது வலஞ் சுழியாக சுழலும் காற்றுக் தொகுதியாக இது உருவாகின்றது.
- ✓ காற்றில் வேகம் மணிக்கு 350 - 400 கிலோ மீற்றரைத் தாண்டும் சந்தர்ப்பங்களும் உண்டு.
- ✓ இக்காற்றுடன் பலத்த மழையும் பெய்யும். இவ்வாறு ஏற்படும் வேகமான காற்று மற்றும் மழை காரணமாக உயிரிழப்புகள் ஏற்படுவதுடன், சொத்துகளும் சேதத்திற்குள்ளாகும்.
- ✓ 1978 ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி இலங்கையில் ஏற்பட்ட சூறாவளி காரணமாக 900 பேர் உயிரிழந்ததுடன், சொத்துகளும் பலத்த சேதத்திற்குள்ளாகின.

**10. சூறாவளி வீசும்போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு முறைகள் எவை?**

- ✓ ஆபத்தான இடங்களிலிருந்து வெளியேறுதல்
- ✓ பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுதல்
- ✓ இலகுவான மற்றும் அத்தியாவசியமானவற்றை மாத்திரம் எடுத்துச் செல்லல்
  உ+ம் :- தண்ணீர்ப் போத்தல், விசுக்கோத்து, மின்சூழ்

**11. நீங்கள் வீட்டினுள் தங்கியிருப்பீன் செய்ய வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் எவை?**

- ✓ வீட்டின் சுவர், கூரை என்பவற்றின் பாதுகாப்பு விடயத்தில் கவனம் செலுத்தவும்
- ✓ வீட்டுக்குச் சேதத்தை உண்டு பண்ணக்கூடிய மரங்களையும் அதன் கிளைகளையும் அகற்றி விடல்.
- ✓ மின்சாரத்தை துண்டித்து விடல்

**12. மின்னல் பற்றி விளக்குக.**

- ✓ முகிழ்களில் ஏற்படும் நிலை மின்னேற்றங்கள் காரணமாகவே மின்னல் தோன்றுகின்றது முகில்களின் உள்ள சிறிய நீர்த்துளிகள் ஒன்றுடன் ஒன்று மோதுவதால் அவற்றின் நிலை மின்னேற்றம் உண்டாகிறது. இவ்வாறு முகில்களில் நிலை மின்னேற்றம் சேர்வதால் எற்றம் பெற்ற முகில்கள் உண்டாகின்றன. ஏற்றம் பெற்ற முகில்களில் சேரும் மின்னேற் றங்கள் மின் பொறியாக வேறு முகில்களின் மீது அல்லது தரை மீது பாய்வது மின்னல் உண்டாதல் என அழைக்கப்படும்.

M.H.M Musthanzir

www.lkdu.lk

- ✓ இதன்போது உண்டாகும் இடி முழக்கமானது மின்னல் தென்பட்ட பின்னர் எமக்குக் கேட்கக்கூடியதாக இருக்கும். இலங்கையில் மார்ச் - ஏப்ரல், ஒக்டோபர் - நவம்பர் காலப்பகுதிகளில் அதிகளவில் இடி மின்னல் ஏற்படும். ஆயினும், வருடத்தின் எந்தவொரு காலப்பகுதியிலும் இடி மின்னல் ஏற்படலாம்.

**13. இடி மின்னல் தாக்குதல்களால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளும் முறைகள்**

- ✓ திறந்தவெளிப் பிரதேசங்களில் தரித்து நிற்காதிருந்தல்
- ✓ தனிமையில் அல்லது உயரமான மரங்களின் கீழ் நிற்காதிருந்தல்
- ✓ தொலைபேசிப் பாவனையைத் தவிர்த்தல்
- ✓ உலோகப் பொருட்களைத் தொடாது இருத்தல்

**14. சுனாமி பற்றி விளக்குக.**

- ✓ சமுத்திரத்தின் அடியில் ஏற்படும் புவியதிர்ச்சி, அணுகுண்டு வெடிப்பு, எரிமலை வெடிப்பு , நட்சத்திரங்கள் வெடித்து வீழ்தல் முதலிய நிகழ்வுகள் காரணமாக ஏற்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களின் கடலில் உருவாகின்ற பாரிய அலைகள் நில அதிர்வு ஏற்பட்ட இடத்தை மையமாகக் கொண்டு அனைத்து திசைகளுக்கும் நகர்ந்து செய்லும் இதனால் கடற்கரை பிரதேசத்திற்கு பாரிய சேதங்கள் உருவாகும்.
  2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி இந்து சமுத்திரப் பகுதியில் உண்டான கனாமிப் பேரலைகளை பாரிய போழிவை ஏற்படுத்திய ஒரு நிகழ்வாகக் குறிப்பிடலாம்.

**15. சுனாமிப் பேரலைகளின் பொழுது அழிவுகள் ஏற்படக் காரணமாக இருக்கும் மனித செயற்பாடுகள்**



- ✓ கரையோரங்களில் காணப்பட்ட மூடுதாவரங்களை அகற்றுதல்
- ✓ முருகைக் கற்பாறைகளுக்கு சேதம் விளைவித்தல்
- ✓ கரையோரங்களிலுள்ள கண்டல்நிலத் தாவரங்களை அழித்தல்
- ✓ கரையோர மணல் மேடுகளிலுள்ள மணல் அகழ்வு

**16. சுனாமியினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைப்பதற்கான வழிமுறைகள் எவை?**

- ✓ ஊடகங்கள் வாயிலாக விடுக்கப்படும் அறிவிப்புகளை செவிடுத்தலில் கவனம் செலுத்துதல்
- ✓ அபாய அறிவிப்புச் செய்யப்பட்ட பிரதேசங்கலிலிருந்து வெளியேறல்
- ✓ பிறரையும் இவ்விடயம் தொடர்பாக அறிவுறுத்தல்
- ✓ சுனாமி ஏற்பட முன்னரான அறிகுறிகளை அறிந்து வைத்திருத்தல்
- ✓ உயரமான பிரதேசம் நோக்கிச் செல்லுதல்

**17. வரட்சி பற்றி விளக்குக.**

- ✓ சமூகத்திற்குத் தேவையான நீரை முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை தோன்றும்போது அது வரட்சிக் காலம் என்று அமைக்கப்படுகிறது. போதியளவு மழைவீழ்ச்சி கிடைக்காமையால் ஏற்படுவது காலநிலை வரட்சி எனவும் நீர் வழங்களில் ஏற்படும் பற்றாக்குறை காரணமாக ஏற்படுவது நீர்ப் பற்றாக்குறை வரட்சி எனவும் அழைக்கப்படுகிறது. இலங்கையின் ஒரு சில மாவட்டங்களுக்குக் கிடைக்கும் சராசரி மழைவீழ்ச்சியின் அளவு 78% இக்கும் குறைவாக இருக்கையில் அதனை வரட்சிக் காலம் என வளப்பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் அமைச்சு காலநிலை தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. **(தென்கிழக்கு, வடமத்திய, வடமேற்கு)**

M.H.M Musthanzir

STUDY ONLINE

# இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்




## இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

**WWW.LKEDU.LK**

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkdu.lk

**18. வாட்சி காணப்படுவதனால் ஏற்படும் பாதிப்புகள் எவை?**



- ✓ குடிநீர் தட்டுப்பாடு
- ✓ பயிர் நிலங்கள் பாதிப்படைதல்
- ✓ வன விலங்குகள் அழிதல்
- ✓ உயிர்ச்சேதம்
- ✓ நீர்மின் உற்பத்தியில் பாதிப்பு எற்படல்

**19. வாட்சியிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான வழிகள் எவை?**

- ✓ காடுகளை அழிக்காதிருத்தல்
- ✓ நீர்நிலைகளளப் பாதுகாத்தல்
- ✓ ஆறுகள், குளங்களை அசுத்தப்படுத்தாதிருத்தல்
- ✓ மரஞ்செடி கொடிகளை நடுதல்
- ✓ கடுமையான வெயிலின் தாக்கத்திலிருந்து நிலத்தைப் பாதுகாத்தல்

**20. இயற்கை அனர்த்தங்களைக் குறைத்துக் கொள்வதற்கான வழிமுறைகள் வவை?**



- ✓ கண்டல் தாவரங்களைப் பாதுகாத்தல்
- ✓ சுரங்க அகழ்வுகளை மட்டுப்படுத்தல்
- ✓ காடுகளுக்கு தீ மூட்டாதிருத்தல்
- ✓ ஆறுகளில் மணல் அகழாதிருந்தல்
- ✓ காடுகளை அழிக்காதிருத்தல்

**21. அனர்த்தம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அவற்றால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க மேற்கொள்ளும் வழிமுறைகள் எவை?**

- ✓ அனர்த்தம் மற்றும் விபத்துகளின் போது குறிப்பிட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைக் கடைப்பிடித்தல்
- ✓ பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாத்தல்
- ✓ முறையான முதலுதவிச் சிகிச்சை வழங்குதல்
- ✓ பாதிக்கப்பட்டவர்களை விரைவாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லல்

**22. அனர்த்தங்களின்போது உதவும் நிறுவனங்கள் எவை?**



- ✓ முப்படைகள்
- ✓ தீயணைப்புப் படையினர்
- ✓ செஞ்சிலுவை சங்கம்
- ✓ அனர்த்த முகாமைத்துவ நிலையம்
- ✓ பொலிஸ் நிலையம்

**23. அவசரத் தேவைகளின்போது உமக்கு உதவி புரியும் தொலைபேசி இலக்கங்கள் எவை?**

- ✓ 110 தீவணைப்புப் படை மற்றும் அவசர நோயாளிகள் காவு வாகன சேவை
- ✓ 118 தேசிய பாதுகாப்பு தொடர்பான மத்திய நிலையம்
- ✓ 119 பொலிஸ் அவசரப் பிரிவு அவசர மக்கள் முறையீடு
- ✓ 1959 இலங்கை தேசிய வைத்தியசாலை தகவல் மையம்
- ✓ 1969 தெற்கு அதிவேக பாதையை பயன்படுத்துவோர் அவ்வவ் வேளைகளில் தொடர்பு
- ✓ 1991 சுற்றுச் சூழல் மற்றும் இயற்கை தொடர்பான முறையீடுகள்

M.H.M Musthanzir

www.lkdu.lk

**24. அனர்த்த முகாமைத்துவம் என்றால் என்ன?**

✓ விபத்துகள் ஏற்படுவதை முழுமையாகத் தவிர்க்க முடியாதெனினும் அவற்றினால் ஏற்படக் கூடிய சேதங்களைக் குறைத்துக் கொள்ளலாம். இச் செயற்பாட்டினை அனர்த்த முகாமைத்துவம் என்று குறிப்பிடலாம்.

**25. அனர்த்தங்கள் மற்றும் விபத்துக்கள் இடம்பெறக்கூடிய இடங்கள் எவை?**

✓ வீடு
✓ பாடசாலை
✓ வேலைத்தளம்
✓ தொழிற்சாலை



**26. உணவு நஞ்சடைவதற்கான காரணிகள் எவை?**

✓ உணவை உரிய முறையில் கழுவிச் சுத்தம் செய்யாமை
✓ காலாவதியான உணவைப் பயன்படுத்தல்
✓ உணவை உரிய முறையில் தயாரிக்காமை
✓ உணவுப் பொருள்களை விற்பனை செய்தலில் வியாபாரிகளின் முறைகேடுகள்

**27. மருந்துப் பொருட்களின் பாவனையின் போது கவனத்திற் கொள்ள வேண்டியவை எவை?**

✓ வைத்தியர் ஆலோசனைப்படி உட்கொள்ளல்
✓ மருத்தின் குறிப்பிட்ட அளவை மாத்திரம் எடுத்தல்
✓ குறிப்பிட்ட நேரத்தில் மருத்தை உட்கொள்ளல்
✓ குறித்த வெப்பநிலையில் அதனைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்
✓ காலாவதியான மருந்து தொடர்பாகக் கவனமாக இருந்தல்

**28. அனர்த்தங்கள், விபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய தீங்கிழைக்கக்கூடிய எவை?**

✓ மதுபோதையில் வாகனம் செலுத்துதல்
✓ மனக்குழப்பத்துடன் வாகனம் செலுத்துதல்
✓ கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்திய வண்ணம் வாகனம் செலுத்துதல்
✓ புகைத்தல், மதுபாவனை

**29. அனர்த்தம் மற்றும் விபத்துக்கள் தொடர்பில் செயலாற்றும் நிறுவனங்கள் எவை?**

✓ வைத்தியசாலை / அவசர விபத்துச் சேவை
✓ பொலிஸ் நிலையம்
✓ தீயணைப்புப் படை
✓ அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம்
✓ சுகதார சேவை

**30. வீதி விபத்துகள் ஏற்படப் பிரதான காரணமாகவுள்ள விடயங்கள் எவை?**

✓ சாரதிகளால் ஏற்படும் தவறுகள்
✓ பாதையிலுள்ள குறைபாடுகள்
✓ பாவனைக்குதவாத வாகனங்களின் பயன்பாடு
✓ பாதசாரிகளால் ஏற்படும் விபத்துக்கள்



M.H.M Musthanzir

www.kalvi.lk



**31. சாரதிகளினால் ஏற்படும் தவறுகள் எவை?**

- ✓ ஒழுக்கமின்றி வாகனம் செலுத்துதல்
- ✓ மதுபோதையில் வாகனம் செலுத்துதல்
- ✓ அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்துதல்
- ✓ வீதிச் சமிக்ஞை மற்றும் பொலிஸாரின் கட்டளைகனைப் பின்பற்றாதிருத்தல்
- ✓ அதிக வேகமாக வாகனம் செலுத்துதல்

**32. பாதசாரிகளால் ஏற்படும் விபத்துகள் எவை?**

- ✓ வீதிச் சமிக்ஞை மற்றும் வீதி ஒழுங்குமுறைகளைக் கவனிக்காமை
- ✓ வீதியின் வலப்பக்கமாக பயணம் செய்யாமை
- ✓ குழுக்களாகப் பாதையில் செல்லுதல்
- ✓ வீதியில் கையடக்கத் தொலைபேரியைப் பயன்படுத்தல்

**33. துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்கையில் ஏற்படக்கூடிய விபத்துகள் எவை?**

- ✓ குழுக்களாக துவிச்சக்கர வண்டியில் செல்லுதல்
- ✓ இரவு வேளைகளில் முன் விளக்கின்றி துவிச்சக்கர வண்டியைச் செலுத்துதல்
- ✓ துவிச்சக்கர வண்டியின் பின்னால் ஒளித்தெறிப்புக் கண்ணாடியைப் பொருத்தாது விடல்

**34. வீதி விபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய பாதையின் தன்மைகளைத் தருக.**

- ✓ பாதை பழுதடைந்து அதில் நீர் நிரம்பிக் காணப்படல்
- ✓ எண்ணெய்க் கசிவுகள் காணப்படல்
- ✓ முன்னால் புலப்படாத காணப்படல்
- ✓ சமச்சீரற்ற வளைவுகள் கானாப்படல்
- ✓ வீதியோரங்களில் பாரிய மரங்கள் காணப்படல்

**35. வீதி விபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய வாகனங்களின் தன்மைகளைத் தருக.**

- ✓ முன் விளக்கு (Head light) முறையாக ஒளிராமை
- ✓ வாகன தடுப்பு ஒழுங்காக இயங்காமை
- ✓ தேய்வுற்ற டயர்கள் காணப்படல்
- ✓ சமிக்ஞை விளக்கு (Signal light) இன்றி செல்லல்



M.H.M Musthanzir

www.lkdu.lk

**36. வீதி விபத்துக்களை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள்**




**37. புகையிரத விபத்துகளுக்கான காரணங்களைத் தருக.**

- ✓ புகையிரதப் பாதைகளில் பாதசாரிகள் பயணித்தல்
- ✓ புகையிரதப் பாதைகளின் குறுக்கே உள்ள வீதிச் சமிக்ஞைகளை கவனிக்காது வாகனத்தைச் செலுத்துதல்
- ✓ புகையிரத பாதைகளில் ஏற்படக் கூடிய தொழிநுட்பக் கோளாறுகள்
- ✓ புகையிரதக் கடவைகளில் பாதுகாப்புப் படலை அமைக்கப்படாமை

**38. புகையிரத விபத்துகளைத் தவிர்த்துக் கொள்ளும் வழிமுறைகள் எவை?**

- ✓ மிதிபலகையில் பயணிகள் பயணிக்காதிருத்தல்
- ✓ புகையிரதக் கடவைகளில் பாதசாசிகள் நடமாடாதிருத்தல்
- ✓ புகையிரதம் நிறுத்தப்பட முன்னர் பயணிகள் ஏறாமலும் இறங்காமலும் இருத்தல்
- ✓ புகையிரத சமிக்ஞைகளை முறையாகச் செயற்படுத்தல்
- ✓ புகையிரதக் கடவைகளை ஒழுங்காகப் பராமரித்து துப்பரவாக்கல்

**39. வீதி மற்றும் புகையிரத விபத்துகள் நேரும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் எவை?**

- ✓ காயமடைத்தோரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லல்
- ✓ விபத்து தொடர்பாக விரைவில் தகவல் வழங்குதல்
- ✓ கலவர நிலை ஏற்படாத வண்ணம் செயற்படுதல்
- ✓ விபத்துக்குள்ளானவரின் பணம், பொருள் என்பவற்றைப் பாதுகாத்து பாதுகாப்புப் பிரிவினருக்கு அல்லது உடைமையின் உரிமையாளருக்கு அல்லது பாதுகாவலரிடம் ஒப்படைத்தல்

www.lkdu.lk

**40. இரசாயனப் பொருள்கள் பாவனைக்கு எடுக்கப்படும் சந்தர்ப்பங்கள் எவை?**




- ✓ வீட்டுத் தோட்ட செய்கையின் போது
- ✓ பாடசாலை விஞ்ஞான ஆய்வு கூட பரிசோதனைக்காக
- ✓ விவசாய நடவடிக்கைகளுக்காக
- ✓ பூச்சிக் கொல்லி பயன்பாடு

**41. இரசாயனப் பொருட் பாவனையின்பொழுது அனர்த்தங்கள் நிகழும் விதம்**

- ✓ பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுத்தல்
- ✓ உணவுப் பொருள்களுடன் ஒரே இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
- ✓ பொருள்களின் பெயர்சுட்டியை முறையாகக் காட்சிப்படுத்தாமை
- ✓ சிறுவர்களுக்கு எட்டக்கூடிய இடத்தில் வைத்தல்
- ✓ சிபார்சு செய்யப்பட்டவாறு கலவைகள் பயன்படுத்தாமை

**42. இரசாயனப் பொருள்கள் உடலினுள் செல்லும் முறைகள் எவை?**




- ✓ தொடுகை மூலம் தோலினூடே செல்லுதல்
- ✓ சுவாசித்தலின் பொழுது
- ✓ வாய் மூலம் உடலுக்குள் செல்லல்
- ✓ கண்ணில் படுவதால்
- ✓ உடலில் காணப்படும் காயங்களினூடாக
- ✓ உணவின் மூலம்

**43. இரசாயனப் பொருள்கள் மூலம் அனர்த்தங்கள் நிகழ்ந்தால் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் எவை?**

- ✓ அனர்த்தத்திற்கான காரணத்தை முறையாக அறிந்து கொள்ளல்
- ✓ பொருத்தமான முதலுதவிகணை வழங்குதல்
- ✓ இயன்றளவு விரைவாக வைத்தியரிடம் கொண்டு செல்லல்
- ✓ அனர்த்தத்தை உண்டாக்கிய இராசாயனப் பொருள் அடங்கிய போத்தல், உறை ஆகியவற்றை வைத்தியரிடம் சமர்ப்பித்தல்

**44. இரசாயனப் பொருள்களினால் உண்டாகும் அனர்த்தங்களைத் தவிர்த்துக் கொள்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டியவை எவை?**

- ✓ பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்துதல்
- ✓ பயன்படுத்துவதற்கு முன்னர் உறையில் தரப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளல்
- ✓ சிறுவர்களுக்கு இலகுவில் எட்டக்கூடிய இடங்களில் வைக்காதிருந்தல்
- ✓ பொதி செய்யப்பட்ட உறைகளின் உள்ளே இருப்பது நஞ்சு என்பதற்கான அடையாளத்தை இட வேண்டும்.
- ✓ அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றல்




M.H.M Musthanzir

www.lkdu.lk

**45. தகுந்த வாழ்க்கைக்கோலம் அல்லது நுகர்வுக் கோலம் என்றால் என்ன?**

✓ எமது அவசியத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முயல்கையில் தனது பொருளாதார வசதிக்கேற்ப பொருத்தமான வகையில் அவற்றை பூர்த்தி செய்து கொள்வதற்கு முயற்சிப்பது தகுந்த வாழ்க்கைக்கோலம் அல்லது நுகர்வுக் கோலம் என்று குறிப்பிடப்படும்.

**46. நிலையான அபிவிருத்தி என்றால் என்ன?**


✓ எதிர்கால சந்ததியினருக்கு அவர்களது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு எவ்வித இடையூறும் ஏற்படா வண்ணம் தற்கால சந்ததியினரின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வது

- **மனிதர்களின் தேவைகள் பல்வேறுபட்டவை. அவற்றுள் முக்கியமானவை வருமாறு**
  - உணவு, உடை, உறையுள்
  - நீர், மின்சாரத் தேவை
  - போக்குவரத்துத் தேவை
  - கல்வித் தேவை
  - ஓய்வு மற்றும் பொழுது போக்குகளில் ஈடுபடல்
  - சுகாதாரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள்

**47. நிலையான அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கு நாம் கவனத்திற் கொள்ள வேண்டியவை?**



✓ வளங்களை மிதமிஞ்சியவாறு பயன்படுத்தக் கூடாது
✓ சூழலுக்கு இசைவாக வாழப் பழகுதல்
✓ நாட்டின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு செயற்படல்
✓ கழிவுப் பொருட்களை உரிய முறையில் சையாளுதல்
✓ பௌதீக வளங்களைப் பாதுகாத்தல்
✓ சிறந்த பிரஜையமாக எப்பொழுதும் முன்மாதிரியுடன் செயயாற்றுதல்



www.lkdu.lk




- **இன்று மனிதன் அதிகளவான நோய்களுக்கு ஆளாகியுள்ளான். எடுத்துக்காட்டாக,**
  - சிறுநீரக நோய்
  - டெங்குக் காய்ச்சல்

- விவசாய நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படுகின்ற கிளைக்கோசிக் எனும் பதார்த்தமே உவர் வலயத்தில் பரவி வரும் சிறுநீரகப் பிரச்சினைக்கான காரணம் என்பது பொதுவான கருத்தாக உள்ளது. அடுத்து
- கழிவுகளை ஒழுங்கான முறையில் அகற்றாமை டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு காரணமாக உள்ளது.






M.H.M Musthanzir

www.lkdu.lk

# 05 பிரச்சினைகளைத் தீர்த்து சவால்களை வெற்றி கொள்வோம்

**01. இயற்கையின் அடிப்படைச் செயற்பாடுகள் எவை?**


- ✓ உருவாக்கம்
- ✓ நிலைபேறு
- ✓ அழிவு

➢ **பிரச்சினை என்பது** இரு பக்கங்களைக் கொண்டது. அதாவது ஒருவருக்குப் பிரச்சினையான விடயம் மற்றவருக்குப் பிரச்சினையாக அமைாது. உதாரணமாக, ஆற்றைக் கடப்பது முயலுக்குப் பிரச்சினையான விடயமான போதிலும் ஆமைக்கு அது ஒரு பிரச்சினையான விடயமாக இருக்கவில்லை. அதேபோன்று, முயலுடன் ஓட்டப் பந்தயத்தில் ஈடுபடுவது ஆமைக்குப் பிரச்சினையான போதிலும் முயலுக்கு அது ஒரு பிரச்சினையான விடயமாக அமையவில்லை. அதேபோன்று, பிரச்சனை என்பது தனிநபர்களைப் பொறுத்தும் சந்தர்ப்பங்களைப் பொறுத்தும் வேறுபடலாம்.

**02. பிரச்சினை என்றால் என்ன?**

- ✓ ஒரு செயற்பாட்டை அல்லது ஒரு நிலைமையை அல்லது ஒரு சந்தர்ப்பத்தை அடைவதற்குள்ள தடை எனக் குறிப்பிடலாம். குறித்த நேரத்தில் காணப்படும் நிலைமை மற்றும் தான் எதிர்பார்க்கும் விடயம் என்பவற்றை அவ்வாறே நிறைவேற்றுவதற்கு முடியாமற் போதல் மற்றும் தனக்கும் அவற்றுக்குமிடையிலான இடைவெளியே பிரச்சினையாகும்.

**03. பல்வேறு விதமான பிரச்சினைகளைத் தருக.**




- ✓ பௌதீகப் பிரச்சினை
- ✓ சுற்றாடற் பிரச்சினை
- ✓ உளரீதியான பிரச்சினை
- ✓ தொழிநுட்பப் பிரச்சினை

➢ மனித மனங்களில் ஏற்படுகின்ற தீராத ஆசைகள் மற்றும் அளவற்ற எதிர்பார்ப்புகள் காரணமாக எப்போதும் பிரச்சினைகளால் வாழ்நாள் முழுவதும் துன்பத்துக்குள்ளாகலாம் அவற்றைத் தீர்ப்பதற்கு உதவி செய்வதும் மிக முக்கியமானதாகும்.

**04. மாணவர்கள் முகங்கொடுக்க நேரிடும் பிரச்சினைகள் எவை?**


- ✓ உணவும் போசணை தொடர்பான பிரச்சினைகள்
- ✓ பொருளாதார நெருக்கடிகள்
- ✓ தான் விரும்பியது கிடைக்காமை
- ✓ பரீட்சைகளில் சித்தியடையாமை
- ✓ பாதுகாப்பும் பராமரிப்பும் இல்லாமற் போதல்
- ✓ அன்பு கிடைக்காமை



M.H.M Musthanzir

www.lkdu.lk

**05. பிரச்சினை, பிரச்சினைகளுக்கான காரணங்கள், பிரச்சினைகளால் ஏற்படும் தாக்கங்கள் என்பவற்றை பகுப்பாய்வு செய்க.**





**06. பிரச்சினைகளைத் தீர்ப்பதன் பயன்கள் எவை?**



- ✓ அசௌகரியம் இல்லாமல் போதல்
- ✓ சமாதானம் ஏற்படல்
- ✓ புரிந்துணர்வு வளர்ச்சியடைதல்
- ✓ பிரச்சினைக்கான தீர்வைத் தேடுதல்
- ✓ நோக்கம் நிறைவேறல்

**07. நீங்கள் பாடங்களில் குறைந்த புள்ளிகளைப் பெறுகின்றீர்கள் எனில் இப்பிரச்சனைக்கான தீர்வாக மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகளை முன்வைக்குக.**



தினசரி பாடசாலைக்குச் செல்லுதல்
↓
கற்றல் செயற்பாடுகளுக்குத் தயாராகச் செல்லுதல்
↓
ஆர்வத்துடன் பாடங்களில் பங்குபற்றல்
↓
சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொல்லல்
↓
விட்டுக்கொடுப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுதல்
↓
தனக்குப் பொருத்தமற்ற செயற்பாடுகளிலிருந்து விலகுதல்
↓
கற்ற விடயங்களை மீண்டும் சுற்றல்
↓
மீட்டல் பயிற்சிகளில் ஈடுபடுதல்
↓
பரீட்சையைப் பயமின்றி எதிர்கொள்ளல்

M.H.M Musthanzir

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkdu.lk

**08. சவால்கள் என்றால் என்ன?**

- ✓ வாழ்க்கையின் இலக்குகளை அடைவதற்குள்ள பல்வேறு தடைகள் சவால்களாகும்

**09. சவால்களை வெற்றி கொள்வது எவ்வாறு?**



- ✓ பொறுமை
- ✓ தைரியம்
- ✓ உறுதி
- ✓ தன்னம்பிக்கை
- ✓ அர்ப்பணிப்பு

**10. தினசரி வாழ்வில் எதிர்நோக்கும் சவால்களைத் தருக.**

- ✓ பொருளாதாரக் கஷ்டங்களுக்கு மத்தியில் கல்வி நடவடிக்கைகளை வெற்றி கொள்ளல்
- ✓ பரீட்சைகளில் வெற்றி பெறுதல்
- ✓ தோல்விகளை வெற்றிகரமாக எதிர்கொண்டு தனது நோக்கங்களை அடைதல்
- ✓ வாழ்க்கையின் இலக்கை அடைதல்
- ✓ தவறுகளைத் திருத்திக்கொள்ளல்
- ✓ சுற்றாடலைத் தூய்மையாக வைத்திருத்தல்


**11. "நான் தோல்வியடையவில்லை. மின்குமிழ் ஒன்றைத் தயாரிக்கக் கூடிய மற்றுமொரு முறையைக் கண்டுபிடித்துள்ளேன்" மேற்படிக் கூற்று யாருடையது?**

- ✓ தோமஸ் அல்வா எடிசன்

**12. சவால்களை வெற்றி கொள்வதற்கு மேம்படுத்த வேண்டிய உளச் சமூகத் தேர்ச்சிகளைத் தருக.**

- ✓ பிரச்சினைகளைத் தீர்த்தல்
- ✓ புரித்துணர்வு
- ✓ மற்றவரை மகிழ்வித்தல்
- ✓ மனவெழுச்சியைக் கட்டுப்படுத்தல்
- ✓ பயனுள்ள தொடர்பாடல்

**13. வாழ்க்கையை வெற்றிகரமானதாக உருவாக்குவதற்கு பிரச்சினைகளையும் சவால்களையும் மாற்றியமைக்கும் வழிகள்**




www.kdu.lk

# 06 வேலை உலகிற்கு பிரவேசிப்போம்

**01. வேலை உலகு என்றால் என்ன?**

- ✓ தனிநபரொருவர் தனது தொழிலுக்கும் தினசரி நிறைவேற்றும் உண்மையான செயற்பாடுகளுக்கும் இடையிலான தொடர்பே வேலை உலகாகும். டிச்லர் (Teichier 1909)
- ✓ வேலை உலகு என்பது தற்போது பணியாற்றும் அல்லது பணியாற்ற எதிர்பார்க்கும் அனைவருக்குமான சந்தர்ப்பமாகும். (Roone, 2001)

**02. வேலை உலகின் பல்வேறு தொழில்களை பட்டியலிடுக.**




**03. ஆடை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் காணப்படும் தொழில்கள் எவை?**

- ✓ முகாமையாளர்
- ✓ எழுதுவினைஞர்
- ✓ இயந்திரம் பழுது பார்ப்பவர்கள்
- ✓ உணவக சேவையாளர்
- ✓ மின்சார நீர்வழங்கல் சேவையாளர்கள்
- ✓ மேற் பார்வையாளர்
- ✓ சாரதிகள்
- ✓ வாகன நடத்துதர்கள்,



www.kdu.lk



**04. பிரதேசங்களுக்கிடையிலான வேறுபாடுகளும் வளங்களும்**

- ✓ நுவரெலியா - மரக்கறி வகைகளும் பூக்களும்
- ✓ காலி, மாத்தறை - மீன்பிடித் தொழில்
- ✓ அநுராதபுரம், அம்பாறை - நெற்பயிர்ச் செய்கை
- ✓ வேவல்தெனிய - பிரம்புக் கைத்தொழில்
- ✓ கஜீகம- மரமுந்திரி வியாபாரம்

**05. குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு உரியனவான பாரம்பரியமான கைத்தொழில்கள்**

- ✓ பிலிமதலாவ - பித்தளைப் பொருட்கள்
- ✓ அம்பலாங்கொட - முகமூடிகளும் பொம்மலாட்டக் கைப்பணியும்
- ✓ மொல கொட - களிமண் சார்ந்த உற்பத்திப் பொருட்கள்



**06. வேலை உலகில் நிலவும் தொழில்களின் துறைகளும் எவை?**

- ✓ அரச மற்றும் - அரச உதவி பெறும் துறை
- ✓ தனியார் துறை
- ✓ சுயதொழில்கள்

**07. தமது சக்தியை செலவிடும் வகையின் அடிப்படையில் தொழில்களின் வகைகள் எவை?**

- ✓ அதிகளவில் மூளை உழைப்பை வழங்குபவர்கள் (ஆசிரியர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், நிருவாக உத்தியோகத்தர்கள்)
- ✓ அதிகளவில் உடல் உழைப்பை வழங்குபவர்கள் (விவசாயிகள், தொழிலாளிகள், தச்சர் , மேசன்கள், சுத்திகரிப்பு தொழிலாளிகள்)

- ➢ நாம் செய்யும் வேலையின் பெறுமதிக்கு பணம் வழங்கப்படுமாயின் அது தான் தொழில் என்று தான் கருதுகின்றேன்.
- ➢ சிலர் நீலநிறக் கழுத்துப்பட்டி வேலை, வெள்ளை நிறக் கழுத்துப்பட்டி வேலை என்கின்றனர். அது என்ன?
- ➢ அது செய்யும் வேலையைப் பொறுத்தது தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர் மற்றும் மேசன்மார் போன்றோரின் வேலை **நீல நிறக்கழுத்துப்பட்டி** வேலை எனப்படும். அலுவலகங்களில் வேலை செய்பவர்களின் வேலை **வெள்ளை கழுத்துப்பட்டி** அல்லது வெள்ளைக் ஆடை வேலை எனப்படும்.
- ➢ மற்றுமொரு வகையில் வேலைகளை உடல்சார் வேலை, மூளை சார் வேலை எனவும் வகைப்படுத்தலாம்.

**08. உழைப்பின் வகைகளைத் தருக.**

- ✓ உடல் உழைப்பு
- ✓ மூளை உழைப்பு

**09. தொழிற்பற்றுடன் செயற்படுவதால் தொழில் தருநருக்கு ஏற்படும் பயன்கள்கள் எவை?**

- ✓ தனது நிறுவனத்தின் புகழை மேலோங்கச் செய்தல்
- ✓ நிறுவனம் தொடர்பாக பொது மக்களிடம் நன்மதிப்பைப் பெறுதல்
- ✓ போட்டி நிறுவனங்களுடன் செயற்படுத்துவதை இலகு படுத்துதல்
- ✓ தொழிலாளரை உற்சாகப்படுத்துதல்
- ✓ நிறுவனத்தின் மூலம் அடையும் இலாபத்தை அதிகரித்தல்



M.H.M Musthanzir

www.lkdu.lk

**10. தொழிற்பற்றுடன் செயற்படுவதால் சேவை பெறுநருக்கு ஏற்படும் பயன்கள்கள் எவை?**

- ✓ தமது தேவைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளல்
- ✓ சமூகத்தில் வினைதிறன் ஏற்படல்
- ✓ மனதை சமநிலைப்படுத்தல் மற்றும் நிறுவனத்துடன் விருப்பத்தை ஏற்படுத்தல்
- ✓ நம்பிக்கையைக் கட்டிவெழுப்புதல்

11. **தொழிற்பற்றுடன் செயற்படுவதால் தொழில் செய்பவருக்கு ஏற்படும் பயன்கள்கள் எவை?**

- ✓ தனது தொழில் பற்றிய மதிப்பு ஏற்படல்
- ✓ தொழிலைப்பற்றி மேலும் கற்றுக்கொள்ள ஆர்வமேற்படல்
- ✓ செய்த வேலையைப் பற்றிய திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படல்
- ✓ தனது நிறுவனம் பற்றிய அக்கறையுடன் கடமை புரிய முடிதல்
- ✓ தனது பணியை உயர் தரத்துடன் செய்வதற்கு முயற்சித்தல்

**12. சமூக முன்னேற்றத்திற்காக நிறைவேற்றப்பட வேண்டிய தேவைகள் எவை?**

- ✓ மனிதனின் அடிப்படைத் தேவைகள் (உணவு, உடை, வீடு)
- ✓ உட்கட்டமைப்பு வாசிகள் (நீர், மின்சாரம், தொலைபேசி, பாதை)
- ✓ ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கழிப்பதற்கான வசதிகள்
- ✓ பாதுகரப்பு, சமாதானம் என்பன நிலவுதல்
- ✓ கல்வி, சுகாதார, போக்குவரத்துச் சேவைகள்
- ✓ வாழ்வாதாரத்திற்கான வருமானம் ஈட்டும் வழிகள்



## பயிற்றப்பட்ட ஊழியத்தின் முக்கியத்துவம்

- **உழைப்பு** என்பது உற்பத்திக் காரணிகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. உழைப்பிற் காக வழங்கப்படும் பிரதிபலன் **சம்பளம்** எனப்படும். குறிப்பிட்டதொரு வேலையை தரமாக நிறைவு செய்வதற்கு தனிநபரால் வழங்கப்படும் பங்களிப்பே **உழைப்பு** எனலாம். உழைப்பில் கல்வியால் நாம் பெற்ற **அறிவு, மனப்பாங்கு, திறமை** என்பன செல்வாக்குச் செலுத்தும்.
- உழைப்பு பயனுடையதாய் அமைவதற்கு அறிவு, திறன் மனப்பாங்கு ஆகிய மூன்றும் அடிப்படைகளாக அமையும்.
- உழைப்பை இரண்டாக வகைப்படுத்தலாம்.
  1. **உடல் உழைப்பு**
  - ✓ அதிகளவில் உடலை வருத்தி செய்யப்படும் வேலை உடலுழைப்பு எனப்படும் சாரதி வேலை, விவசாய வேலை, பாரம் சுமத்தல், கொழுந்தெடுத்தல், மீன்பிடித்தல் கைத் தொழிற்சாலை வேலைகள் முதலியன.

  2. **மூளை உழைப்பு**
  - ✓ அதிகளவில் மூளைவை அல்லது சிந்தனையைப் பிரயோகித்து செய்யும் வேலை மூளை உழைப்பு எனப்படும்.
  - ✓ ஆசிரியர், வைத்தியர், விரிவுரையாளர் சட்டத்தரணி, பொறியியலாளர் திட்டமிடல் அலுவலர் நிர்வாக உத்தியோகத்தர் முதலியன.

M.H.M Musthanzir

www.lkdu.lk

- இதேபோன்று, உழைப்பைப் **பயிற்சியுடனான உழைப்பு, பயிற்சியற்ற உழைப்பு** எனவும் இரண்டாக வகைப்படுத்தலாம்.
- **பயிற்சியுடனான உழைப்பு** (பயிற்றப்பட்ட ஊழியம்) என்பது விஷேட திறன்களுடன் கூடிய பயிற்சி பெற்ற தொழிலானரைக் குறிக்கும். கல்வியின் அறிவை வளர்த்துக் கொள்வதன் மூலம் மாத்திரம் தொழிற்பயிற்சியைப் பெற்றுவிட முடியாது. அதற்காக அவ்வத்தொழில்களுக்குரிய பயிற்சியைப் பெற்றிருத்தல் அவசியமாகும். ஒவ்வொரு தொழிலுக்குமான தேர்ச்சிகளையும் தொழிற்பயிற்சியையும் பெற்றுக் கொள்வது தொழிற்பயிற்சி எனப்படும் பின்வரும் உதாரணங்களை அவதானியுங்கள்.

- ஆசிரியர்களுக்கும் கற்பித்தல் தொடர்பான பயிற்சி வழங்கப்படுவதுடன் சேவைக்காலத்தில் இடையிடையே பயிற்சி வழங்குவதும் உண்டு.
- வைத்தியராவதற்கான கல்விக்கு மேலதிகமாக வைத்தியசாலையில் கிரேஷ்ட வைத்தியரின் கீழ் பயிற்சி வழங்கப்படுதல்.
- சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு முன்னர் அதற்கான விசேட பயிற்சியைப் பெறுவதும் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைவதும் அவயெமாகும்.

- தொழிற்பயிற்சி இரண்டு முறைகளில் வழங்கப்படும்
    1. **சேவைக்கு முன்னரான பயிற்சி**
       தொழிலுக்கு சேர்த்துக் கொள்வதற்கு முன்னர் வழங்கப்படும்.
       உதாரணம் : வீட்டு மின்னினைப்பு வேலைக்காக தொழினுட்பக் கல்லூரியில் வழங்கப்படும் பயிற்சி, கற்பித்தலுக்கான தேசிய கல்வியியற் கல்லூரிகளில் வழங்கப்படும் பயிற்சி

    2. **சேவைக்காலப் பயிற்சி**
       தொழிலுக்குச் சேர்த்துக் கொண்ட பின்னர் வழங்கப்படும்.
       உதாரணம் : மோட்டார் வாகனம் திருத்தும் வேலைக்காக பயிற்சிபெற்ற ஒருவரின்கீழ் வேலைக்கமர்த்துதல், ஆசிரியர், வைத்தியர்களுக்கு சேவையாற்றும்போது காலத்திற்குக் காலம் வழங்கப்படும் பயிற்சி.

❖ **தற்போது சைந்தொழிற்துறையின் பயிற்சிகளை வகைப்படுத்துவதற்காக (NVQ) 3 ஆம் நிலையிலிருந்து 7 ஆம் நிலைவரை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத் தகுதியைப் பாடசாலைப் பருவத்திலும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.**

**13. அரச தொழிற் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பயிலக்கூடிய தொழிற்பயிற்சி நெறிகள்**

| | |
|---|---|
| தொழிற்பயிற்சி அதிகார சபை | மின்சார வேலை |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | நீர்க்குழாய் பொருத்துநர் |
| தொழினுட்பக் கல்லூரிகள் | தச்சுத் தொழில் |
| உயர் தொழினுட்ப நிறுவனங்கள் | திட்டவரைபடம் தயாரித்தல் |
| விதாதா நிலையங்கள் | கணினிப் பயிற்சி |
| நெனசல (அறிவகம்) | ஆங்கிலமும் வேறு மொழிகளும் |

M.H.M Musthanzir

www.fkdu.lk

**14. தனியார் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் எவை?**



- ✓ தனியார் தொழினுட்பக் கல்லூரி
- ✓ பார வாகனங்கலைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்கள்
- ✓ கணினிப்பயிற்சி நிறுவனங்கள்
- ✓ ஆங்கில மொழிப் பயிற்சிக் கல்வி நிறுவனங்கள்

  - ➢ நாட்டை அபிவிருத்தி செய்யும் பிரதான காரணியாக விளங்குவது ஊழியப் படையாகும். எனவே, உழைப்பாளியிடம் நல்ல பண்புகளை விருத்தி செய்து, அவரின் அர்ப்பணிப்பு, மனப்பாங்கு ஆகியவற்றின் மூலம் அவரது தொழிற் பங்களிப்பை உச்சி நிலையில் வைத்துக்கொள்ள முடியும்.

**15. உழைப்பாளியிடம் காணப்பட வேண்டிய நல்ல பண்புகன் எவை?**



- ✓ நியாயமான தன்மை
- ✓ உதவுதல்
- ✓ துணிவு
- ✓ உறுதி
- ✓ மகிழ்ச்சி
- ✓ நேர்மை

  - ➢ வேலை உலகு செயற்படும் இடமே **வேலைத்தளம்** எனப்படும் அல்லது தொழில் செய்யும் இடம் என்றும் கூறுவர்
  - ➢ உதாரணம்: வைத்தியர் - வைத்திசாலை
  - ➢ ஆசிரியர் - பாடசாலை
  - ➢ தொழிலாளி - தொழிற்சாலை

**16. கார்ல் டி. ஜெரல்ட் என்பவர் குறிப்பிட்ட உத்தியோகத்தர் அல்லது ஊழியர் ஒருவரிடம் எதிர்பார்க்கும் தேர்ச்சிகள் எவை?**

- ✓ விமர்சன ரீதியான சிந்தனையும் பிரச்சினைகளைத் தீர்த்தலும்
- ✓ தொடர்பாடல் சாதனங்களைப் பயன்படுத்தல்
- ✓ குழுவாகச் செயற்படுதலும், ஒத்துழைப்பு வழங்குதலும்
- ✓ ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபடலும்
- ✓ பல்வகைமைக்கு ஏற்ப செயற்படல்
- ✓ தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ளல்

**17. வேலைத்தள ஊழியரிடம் எதிர்பார்க்கும் விடயங்கள் எவை?**

- ✓ வெளித்தோற்றத்தைச் சிறப்பாகப் பேணுதல்
- ✓ உரிய நேரத்திற்குச் சமூகமளித்தல்
- ✓ குறிப்பிட்ட நேரம் வரை வேலை செய்தல்
- ✓ வேலைத்தளத்தின் முன்னேற்றத்திற்கு அர்ப்பணிப்புடன் ஈடுபடல்
- ✓ பெற்றுக்கொள்ளும் சம்பனத்திற்கு உரிய பணியை உச்சளவில் நிறைவேற்றல்

M.H.M Musthanzir

www.lkdu.lk

**18. ஊழியர் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் இலங்கையில் காணப்படும் பொறிமுறைகள் எவை?**

- ✓ ஊழியர் சேமலாப நிதியச் சட்டம்
- ✓ பெண்கள், சிறுவர்கள், இளைஞக்களை வேலைக்கமர்த்துவதற்கான சட்டம்
- ✓ பெண்களை சுரங்கத் தொழிலில் ஈடுப்படுத்துவதற்கான சட்டம்
- ✓ கடைகள் மற்றும் காரியாலய ஊழியர் தொடர்பான சட்டம்
- ✓ இலங்கை வெளிநாட்டுச் சேவைகள் சட்டம்

**19. ஊழியர்களின் உரிமைகளைத் தருக.**



- ✓ கௌரவத்துடன் தொழிலில் ஈடுபடல்
- ✓ அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொள்ளல்
- ✓ பாதுகாப்பான வேலைத்தளம்
- ✓ சுத்தமானதும் மகிழ்ச்சிகரமானதுமான வேலைத்தளம்
- ✓ உணவு இடைவேளை
- ✓ தொழிலுக்கு ஏற்ற பயிற்சி

**20. ஊழியர்களின் கடமைகளைத் தருக.**

- ✓ உரிய நேரத்திற்கு சமூகமளித்தல்
- ✓ தொழிலுக்கு ஏற்ற வகையிலான தோற்றத்துடன் இருத்தல்
- ✓ நல்ல பண்புகளைக் கடைபபிடித்தல்
- ✓ உத்வேகத்துடன் உழைத்தல்
- ✓ வேலைத்தளத்தின் கௌரவத்தைப் பாதுகாத்தல்
- ✓ வேலைத்தளத்தில் சொத்துக்களை பாதுகாத்தல்

➢ **தரநிர்ணயம்** என்பது தமது திறமைகளை உயரிய மட்டத்தின் வெளிக்கொண்டு வரும் வகையில் செயற்படுவது ஆகும். இதில் மிகவும் முக்கியமானது தனது ஆற்றல், திறமை, இரசனை என்பவற்றுக்குப் பொருத்தமான தொழிலைத் தேர்ந்தெடுப்பதாகும்.

**21. தற்காலத்தில் ஊழியர் ஒருவர் வளர்த்துக்கொள்ள வேண்டிய பண்புகள் எவை?**


- ✓ குழு மனப்பான்மையுடன் செயற்படல்
- ✓ பல்வேறு மொழிகளிலும் பணியாற்றல்
- ✓ தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக்கொள்ளல்
- ✓ முன்வைக்கும் ஆற்றல்
- ✓ பகுப்பாய்வு செய்யும் ஆற்றல்
- ✓ சிறந்த ஆளிடைத்தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளல்
- ✓ முடிவெடுத்தலும் பிரச்சினைகளை இனங்காணலும்



M.H.M Musthanzir

www.lkdu.lk

**22. தொழிற் பண்புகளை கற்றுக் கொள்வதற்கான முறைகள் எவை?**




**23. சேவை பெறுநரைத் திருப்திப்படுத்த ஜெரி கிரகரி கூறிய ஒன்பது வழிகள்**

- ✓ சேவை பெறுநரை உங்கள் தலைவராகக் கருதுங்கள்
- ✓ சேவை பெறுநரின் திருப்தியை மதிப்பீடு செய்யுங்கள்
- ✓ சேவை பெறுநரிடம் நம்பிக்கையைக் கட்டியெழுப்புங்கள்
- ✓ சேவை பெறுநரினால் ஏற்பட்ட பிழைகளை மறந்து விடுங்கள்
- ✓ சேவை பெறுநரின் எதிர்பார்ப்புகளைப் பட்டியலிடுங்கள்
- ✓ சேவை பெறுநரை சரியான முறையில் ஆய்வு செய்து அறிந்து கொள்ளுங்கள்
- ✓ மின்னஞ்சல் ஊடாக அவர்களுடன் கொடுக்கல் வாங்கள் செய்யுங்கள்
- ✓ சேவை பெறுநருடன் சமூக வலைத்தளங்களின் ஊடாக தொடர்பு கொள்ளுங்கள்
- ✓ சேவை பெறுநரிடம் பொய்யுரைப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்

**24. சேவை பெறுநரைத் திருப்தியடையச் செய்யக் கூடிய மேலும் சில வழிமுறைகள்**

- ✓ எப்போதும் பொறுப்பேற்கும் நிலையிலிருத்தல்
- ✓ நேரடியாக கருத்துப்ப பரிமாற்றம் செய்தல்
- ✓ உடன் பதில்களை வழங்குதல்
- ✓ நேரான அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்தல்
- ✓ தனிப்பட்ட வகையில் உதவுதல்
- ✓ சேவை பெறுநரின் பக்கத்திலிருந்து சிந்தித்தல்
- ✓ சேவை பெறுநரின் கருத்துகளைச் செவிமடுத்தல்



STUDY ONLINE

# இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்




## இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

**WWW.LKEDU.LK**

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkdu.lk

- வேலையுலகு தொடர்பாக வினவுகையில் அதிகமானோரின் விருப்பமாக அமைவது வைத்தியர், பொறியியலாளர் முதலிய தொழிற்துறைகளாகும். அதற்கான காரணம் அத்தொழில்கள் மூலம் அதிக வருமானம் ஈட்டப்படுவதும் அவை சமூகத்தினால் மதிக்கப்படுவதுமாகும். எனவே வேலை உலகில் வருமானம் என்பது பிரதான காரணியாக விளங்குகின்றது. தொழிலொன்றுக்கு விண்ணப்பிக்கும்போது கூட முதலில் நோக்குவது சம்பளத்தின் அளவையே. அதற்குக் காரணம், நல்ல வருமானம் கிடைத்தாலே வாழ்க்கைத் தரத்தை மேல்நிலையில் வைத்து சிறப்பாக வாழ முடியும் எனும் எண்ணமாகும்.

**கிடைக்கும் வருமானத்தின் அடிப்டையிலான சாதக, பாதக நிலைகள் வருமாறு,**

**சாதகங்கள்**



- ✓ ஊழியரின் செயற்றிறன் அதிகரித்தல்
- ✓ தொழில் திருப்தி ஏற்படல்
- ✓ வள விரயம் குறைவடைதல்
- ✓ ஊழியர்களின் திருட்டு, ஊழல் என்பன குறைவடைதல்
- ✓ நிறுவனத்துடன் நெருக்கமாக இருந்தல்

**பாதகங்கள்**

- ✓ அதிக விடுமுறை எடுத்தல்
- ✓ வேலைகள் தாமதமாதல்
- ✓ ஆர்ப்பாட்டங்கள் செய்தல்
- ✓ நிறுவனத் தகவல்கள் வெளியாருக்கு வழங்கப்படுதல்
- ✓ திருடுவதற்குத் தூண்டப்படுதல்
- ✓ விரைவாகச் சேவையிலிருந்து விலகுதல்
- ✓ நிறுவனத்தின் முன்னேற்றத்தில் ஆர்வமின்மை



நூலாசிரியர் - M.H.M முஸ்தன்ஸிர் - Zahira College Kalmunai (National School)

தொலைபேசி இலக்கம் - 0758424573

நோக்கம் - இந்த தரம் 08 இற்கான சுயகற்றல் கையேடு எனது அன்பு மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு இலகுவாக இருக்குமென எதிர்பார்த்தவனாக..

எனது அன்பு மாணவர்களின் நலனை மட்டும் என்றும் எதிர்பார்த்தவனாக.